மாலை : 50 மணி : 7 ஜூலை 2008 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு



## கொப்புடைய நாயகி அம்மன்



# அருள்மிகு மகா மாரியம்மன் திருக்கோயில்

## வரதராஜம்பேட்டை - வலங்கைமான்

## திருவாரூர் மாவட்டம் - 612804

www. mahamariammantemple.com

சோழ நாட்டின் காவிரியின் வடபாலும், தென்பாலும் நிறைந்துள்ள பாடல் பெற்ற தலங்களில் குடந்தைக்குத் தென்பாலும் ஆலங்குடிக்கு வடபாலும் வலங்கைமான் நகரில் குடமுருட்டி ஆற்றின் தென் பகுதியில் கோயில் கொண்டு பக்தர்களின் குறை களைந்து அருள் பாலிக்கும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்கி வரும் வரதராஜம் பேட்டை **அருள்மிகு சீதளாதேவி என்கிற மகாமாரியம்மனுக்கு** ஆவணி ஞாயிறு திருவிழா 17.08.2008, 24.08.08, 31.08.08, 7.09.2008 ஆகிய நாட்களிலும் ஆவணி கடை ஞாயிறு 14.09.2008 அன்று தெப்பத்திருவிழாவும் சிறப்பாக நடைபெற உள்ளது, பக்தர்கள் அனைவரும் வருகை தந்து ஸ்ரீ அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்,

### நித்ய அன்னதான திட்டம்

இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தினசரி 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூ,1200/- செலவாகிறது, இத்தொகையைப் பணமாகவோ அல்லது பொருளாகவோ வழங்கி அம்மனின் அருளை பெறலாம், அல்லது ரூ,15,000/- வழங்கினால் நிரந்தர முதலீடாக வைத்து அதில் வரும் வட்டியை கொண்டு ஆண்டுக்கு ஒரு நாள், மணநாள், பிறந்தநாள், குழந்தைகள் பிறந்தநாள் மற்றும் முக்கிய நாட்களில் உங்கள் பெயரில் அன்னதானம் வழங்கப்படும், நீங்கள் வழங்கும் தொகைக்கு வருமான வரி விலக்கு உண்டு. நீங்களும் அன்னதானம் செய்யலாம். பணம் மற்றும் D.D அனுப்ப வேண்டிய முகவரி.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு மகாமாரியம்மன் திருக்கோயில்
வலங்கைமான் - திருவாரூர் மாவட்டம்

சு.ஞானசேகரன் பி.காம்., பி.எல்.,
ஆய்வர்/தக்கார்

ரெ,சீனிவாசக சித்தையா எம். ஏ., பி.எட்.,
செயல் அலுவலர்.



# திருக்கோயில்


திருவள்ளுவர் ஆண்டு 2039 - ஆடி மாதம்
மாலை : 50 மணி : 7 ஜூலை 2008


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

தபசு இருந்த அம்பிகை கோமதிக்கு இறைவன் சங்கரநாராயணராக காட்சி கொடுத்த திங்கள் ஆடித்திங்கள். சூடிக் கொடுத்த சுடரொளி ஆண்டாள் அவதரித்த திருநாள் ஆடிப்பூர நன்னாள். ஆடிப்பட்டம் தேடி விதைக்கும் உழவர் பெருமக்களுக்கு ஆறுகளில் புதுப்புனல் பாய்ந்தோடும் புண்ணியத் திங்கள். இத்தகைய சிறப்புகள் கொண்ட ஆடித்திங்களின் **''திருக்கோயில் இதழ்''**, மக்கள் இம்மையின்பமும், மறுமையின்பமும் பெற இறைசார்புடைய கந்தபுராணம், கந்தரலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தர் சஷ்டி கவசம், சண்முகக் கவசம் போன்ற கந்தனின் அருட்பனுவல்களைப் பாராயணம் செய்தல் வேண்டும் என்று முருகப் பெருமான் அருட்பனுவல்களின் சிறப்புகளைத் தொகுத்து வழங்கியுள்ள டாக்டர்.இராதாதியாகராசன் அவர்களின் **''கவசமும் அலங்காரமும்''** எனும் கருத்தோவியத்துடன் துவங்குகிறது.

துன்பமின்றி எந்நாளும் இன்பத்தோடு வாழ திருமூலநாயனாரின் கருத்துக்களை வழிகாட்டியாகக் கொண்டு வாழ முற்படவேண்டும் என **''இன்பமே எந்நாளும் துன்பமில்லை''** எனும் தலைப்பில் திருமூல மந்திரத்தின் சிறப்புகளை வழங்கியுள்ளார் திரு.மு.விஜயரெங்கதுரை அவர்கள்.

8.8.2008 அன்று வரும் சுந்தரர் குருபூஜை திருநாளை முன்னிட்டு சிறப்பு கட்டுரையாக வெளிவந்துள்ளது **''ஆனைமேல் சென்ற அழகிய சுந்தரன்''** எனும் கட்டுரை. கயிலை மலையானை வணங்கிட சுந்தரர் யானை மீதும், சேரமான் பெருமான் குதிரை மீதும் கயிலைக்குச் செல்லும் காட்சியினை வண்ண ஓவியப்படமாக அடியார்கள் மனதில் இடம்பெறத்தக்கவகையில் இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும்.

உயிர்கள் மீது வைக்கின்ற கருணையாகிய ஜீவகாருண்யமே முக்தியுலகிற்கு திறவுகோல் என்பதை ''உயிர்க்கருணை'' எனும் தலைப்பில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள் வழங்கியுள்ள அறவுரை, அவரது நினைவலையாக உலா வந்துள்ளது.

இவ்விதழுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் அறியாமையாகிய அழுக்கைப் போக்கிட குரு எத்துணை அவசியம் என்பதை **''குருவே துணை''** எனும் தலைப்பில் விளக்கியுள்ளார் தமிழாகரர் திரு.தெ.முருகசாமி அவர்கள்.

திருவதிகை கோவிந்த விண்ணகரம் அருள்மிகு சரநாராயணப் பெருமாள் திருக்கோயில், காரைக்குடி, அருள்மிகு கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோயில், திருஞானசம்பந்தப் பெருமானுக்கு இறைவன் முத்துப்பந்தல் வழங்கிய திருத்தலமான பட்டீஸ்வரம் அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் சிறப்புகள் திருத்தல உலாக்களாக இவ்விதழில் வெளிவந்துள்ளன.

திருமாலின் திருவடிப் பெருமைகளை **''குலசேகராழ்வாரும், திருவரங்கனும்''** எனும் தலைப்பில் முனைவர் ஈ.பரந்தாமன் அவர்கள் வழங்கியுள்ளார். திரு.மு.இராமநாதப்பிள்ளை அவர்களின் **''உலகம் உய்ய உதித்த உடையவர்''** எனும் தொடரும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளது.

சிந்தனைக்கினிய செல்வங்களாக வெளிவந்துள்ள இந்த எழுத்தோவியங்களை படித்து பயனடைய வேண்டுகிறேன். எல்லாம் வல்ல இறையருள் அன்பர்கள் அனைவருக்கும் சிறந்த செல்வத்தையும் வளமான வாழ்வையும் அருள்பாலித்திட வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
சிறப்பு ஆணையாளர்
மற்றும் ஆணையாளர்


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.



# குறளோவியம்

ஒரு நாள் மாலைப்பொழுது! ஏரிக்கரை ஓரமாக வள்ளுவர் மெல்ல நடந்து சென்று கொண்டிருந்தார். ஆழ்ந்த சிந்தனை. சற்று நிற்பார். மீண்டும் நடப்பார். அவரைக் கடந்து இருவர் ஏதோ வாயாடிக்கொண்டு போயினர்.

''யாரப்பா இந்த ஆள்? எப்போது பார்த்தாலும் - ஏரிக்கரை, குளக்கரை, மலைப்பாறை என்று அலைந்து கொண்டேயிருக்கிறான். வானைப் பார்க்கிறான். பூமியைப் பார்க்கிறான். நெற்றியைச் சுருக்குகிறான். யார் இது?''

இப்படி ஒருவன் கேட்க, மற்றவன் ஏளனமாக விளக்கமளித்தான்:

''வள்ளுவனாம்! அதிலும் சாதாரண வள்ளுவன் இல்லையாம்! திருவள்ளுவனாம்! சிந்திக்கிறானாம்- அறநூல் எழுதுகிறானாம் கிறுக்கன்! எத்தனையோ பித்தர்களில் இவன் ஒரு பித்தன்!''


சிந்தனை கலைந்தது வள்ளுவப் பெரியாருக்கு! செவியில் விழுந்தது அவர்கள் வாரியிறைத்த வசைமொழி! இழிமொழி! அவர்களைத் திரும்பிப் பார்த்தார். அவர்கள் வள்ளுவரை நோக்கி ஏகடியம் செய்துகொண்டே போய்விட்டனர். ஏரியோரத்தில் சிலர் கழனி வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். நிலத்தை வெட்டிக் கொண்டிருந்தனர் ஒரு பகுதியில்! கழனியில் உழுது கொண்டிருந்தனர் ஒரு பகுதியில்! கிணறு தோண்டிக் கொண்டிருந்தனர் மற்றொரு பகுதியில்! அனைத்தையும் பார்த்த வள்ளுவருக்கு ஒரு அழகான உவமைக் குறள் கிடைத்தது.

''தன்னை வெட்டியும் தோண்டியும் புண்படுத்துகிறவரையும் நிலம் பொறுத்துக்கொண்டு அவர்களையும் தன்மீதே தாங்கி நிற்கிறதல்லவா? அதைப் போலத்தான் நம்மை இகழ்ந்து பேசுகின்றவர்களையும் பொறுத்துக் கொள்வது நம் தலையாய பண்பாகும்'' என்று தனக்குத்தானே வள்ளுவர் சொல்லிக் கொண்டார். குறள் பிறந்துவிட்டது.

***''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை***
***இகழ்வார்ப் பொறுத்தல் தலை.''***

நெஞ்சில் இந்தக் குறளை எழுதிக்கொண்ட வள்ளுவர். நிலமகளைப் பார்த்து ஒரு கேள்விக் கணையைத் தொடுத்தார்.

‘‘நிலமகளே, உன்னைத் துன்புறுத்துவோரை நீபொறுத்துத் தாங்கிக் கொள்கிறாய்! உன்னைப் பார்த்து நானும் என்னை என் எதிரில் இகழ்ந்து பேசியோரைப் பொறுத்துக் கொண்டேன், ஆனால் எனக்கு ஒரு ஐயப்பாடு! அதனை நிலமகளே, நீஎனக்கு விளக்குவாயாக! நேரில் பழிச்சொல் கூறுவோர் ஒருபுறமிருக்க. ஒருவர் நேரில் இல்லாதபோது அவர் மீது பழிச்சொல் கூறுவதைச் சிலர் தங்கள் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்களே, அத்தகையோர் உடல் பாரத்தையும் சுமப்பதுதான் உனக்கு அறம் என்று நீகருதிக் கொண்டிருக்கிறாயா?’’



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

வள்ளுவர் கேட்ட இந்தக் கேள்வியும் ஒரு குறளாக வடிவெடுத்துவிடுகிறது.

**‘‘அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்**
**புன்சொல் உரைப்பான் பொறை,’’**

| | | |
|---|---|---|
| **அதிகாரம்- 16** | **பொறையுடைமை** | **பாடல்- 151** |
| **அதிகாரம் -19** | **புறங்கூறாமை** | **பாடல்- 189** |

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது

## இதழின் உள்ளே ...


| | | |
|---|---|---|
| 1 | கவசமும் அலங்காரமும் - டாக்டர் திருமதி இராதா தியாகராசன் | 5 |
| 2 | இன்பமே எந்நாளும் துன்பமில்லை - திரு.மு.விஜயரங்கதுரை | 9 |
| 3 | குலசேகராழ்வாரும் திருவரங்கனும் - முனைவர் ஈ.பரந்தாமன் | 12 |
| 4 | ஓதற்கரிய திருஞானம் ஓதுதல் | 15 |
| 5 | திருவதிகை கோவிந்த விண்ணகரம் அருள்மிகு சரநாராயணப்பெருமாள் - புதுப்பேட்டை.வ.கோவிந்தன் | 17 |
| 6 | இந்து சமய அறநிலையத்துறையில் இரண்டாண்டு சாதனைகள் | 20 |
| 7 | ஆனைமேல் சென்ற அழகிய சுந்தரன் | 24 |
| 8 | அருள்மிகு கொப்புடைய நாயகி | 26 |
| 9 | உயிர்க்கருணை - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நினைவலைகள்) | 29 |
| 10 | உலகம் உய்ய உதித்த உடையவர் - பெ.இராமநாதபிள்ளை | 32 |
| 11 | குருவே துணை - தமிழாகரர் தெ. முருகசாமி | 35 |
| 12 | அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில், பட்டீஸ்வரம் | 37 |

# சமயபுரம் அருள்மிகு மாரியம்மன்



# கவசமும் அலங்காரமும்

தொன்மைக்காலந் தொட்டுத் தமிழ்ப் பெருமக்கள் முருகப் பெருமானை வழிபடு தெய்வமாகக் கொண்டு மனம், மொழி, மெய்களால் முறையே,சித்தித்தும், வாழ்த்தியும் வணங்கியும் பயன்பெற்று வருகிறார்கள். முருகப் பெருமானைக் குறிஞ்சி நிலத் தெய்வமாகத் தொல்காப்பியர் குறித்துள்ளார்.

"சேயோன்மேய மைவரை உலகமும்" என்பது தொல்காப்பியம். முருகப் பெருமானது புகழ் நிறைந்த வரலாறுகள் பலவுள். அவற்றுளெல்லாம், சிறந்து விளங்குவது, அப்பெருமான் தேவர்கட்கு இடையூறுகள் பல செய்த சூரபதுமன் முதலிய அசுரர்களைக் கொன்று, தேவர்களை வாழ்வித்து, தெய்வயானை, வள்ளி உடனாக எழுந்தருளி, நமக்கு அருள்புரிந்து கொண்டிருக்கும் வரலாறேயாகும். முருகப் பெருமானது தொன்மையை

**"ஏதிலாக் கற்பம் எண்ணில சென்ற**
**ஆதலால் இக்கதையும் அனந்தமாம்".**

என்று கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தில் பாடியிருக்கின்றார். எனவே முருகப்பெருமானது வரலாறு பல திறத்ததாயினும் கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ள வரலாறே அருளாளர்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.

முருகப் பெருமானைப் பாடிய அருளாளர்கள் பலர். அவர்களுள் நக்கீரர் கச்சியப்ப சிவாச்சாரியர், அருணகிரிநாதர், சிற்றம்பலநாடிகள், குமரகுருபரர், சுவாமிநாத தேசிகர், கச்சியப்ப முனிவர், அந்தகக்கவி வீரராகவ முதலியார், பகழிக்கூத்தர், மார்க்க சகாயதேவர், கந்தப்பதேசிகர், சிதம்பரசுவாமிகள், இராமலிங்க அடிகளார், சோமசுந்தரநாயகர், தேவராய சுவாமிகள் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.



இவர்கள் அனைவரும் முருகப்பெருமானது அருள்சேர் புகழைப்பாடி இருள்சேர் இருவினையையும் அறுத்தவர்கள் ஆவார்க்ள். முருகப் பெருமானை வழிபடும் காலத்து, அவனைச் சிந்தித்து உள்ளம் உருக்கம் பெறுதற்கு அவ்வருளாளர்களின் திருப்பாடல்கள் பெரிதும் துணை செய்வனவாம். அப்பெருமான் திருவடியில் அன்புப்பயிர் வளர்வதற்கு இந்நூல்களில் சிலவற்றையாவது பொருளுணர்ந்து படித்தல் பெரிதும் துணைபுரியும்.

முருகப் பெருமானே "சிவசக்தி" என்பதும் அவருக்கும் சிவபெருமானுக்கும் எவ்வகையாலும் வேற்றுமை இல்லை என்பதும், அப்பெருமான் தன்னை வழிபடும் அடியார்கட்குச் செல்வமும், ஞானமும், பேரின்பமும் கொடுத்து அருளுவார் என்பதும் அடியார்கள் கண்ட அனுபவம் ஆகும். இதனை, கச்சியப்ப சிவாச்சாரியார், சிவபெருமானின் அருளுரையாக

**"ஆதலின் நமதுசக்தி அறுமுகன்: அவனும் யாமும்**
**பேதகம் அன்றால்: நம்போல் பிரிவிலன்:யாண்டும் நின்றான்**
**ஏதமில் குழவிபோல்வான்: யாவையும் உணர்ந்தான்; சீரும்**
**போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்"**

எனத்தாம் அருளிய கந்தபுராணத்துள் குறிப்பிடுவர். முருகப்பெருமான் வழிபாடே சிவவழிபாடு என்பதைக் குமரகுருபரர் போன்றோர் தாம் அருளிய அருட்பனுவல்களிலும் குறித்துள்ளனர்.

மக்களுடைய மனநிலைக்கும், காலநிலைக்கும் ஏற்ப சில அருட்பனுவல்கள் பலராலும் ஓதப்பெற்றுப் பாராயணம் செய்தற்குரிய நூல்களாகி விடுகின்றன. சங்ககாலத்திலும், அதற்குப் பின்னரும், திருமுருகாற்றுப்படை மக்களால் பெரிதும் ஓதப்பட்டு வந்தது. பதினைந்தாம் நூற்றாண்டு முதல், முருகப்பெருமானைப் பற்றி எழுந்த அருட்பனுவல்களான திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருவகுப்பு முதலியன பாராயணம் செய்யப்பட்டுப் புகழ் நூல்களாக மக்களிடையே பெரிதும் நிலவி வந்தன. பின்னர் கந்தர் கலிவெண்பா, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் திருவிரிஞ்சைமுருகன் பிள்ளைத்தமிழ், திருத்தணிகை பிள்ளைத்தமிழ், திருப்போரூர் பிள்ளைத் தமிழ் முதலியன அன்பர்களால் பாராயணம் செய்யப்பட்டு வந்தன.

இக்காலத்தில் கந்தர் அனுபூதி கந்தரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், சண்முகக் கவசம் போன்ற அருள்நூல்கள் மக்களால் பெரிதும் விரும்பிப் பாராயணம் செய்யப்பட்டு வருவதைக் காண்கிறோம். ஏனைய அருள்நூல்களுக்கு இல்லாத பெருமை, பாலதேவராய சுவாமிகள் அருளிய கந்தர் சஷ்டிக் கவசம் என்ற நூலுக்கு வாய்த்துள்ளது. அந்நூல் இசையுடன் பாடப்பெற்ற இசைத்தட்டு வடிவிலும் தமிழகமெங்கும் நாளும் மக்களால் கேட்கப்படுவதை நாம் அறிகிறோம். பெரும்பாலான மக்களால் ஓதப்பட்டுப் பாராயணம் செய்யப்படுவதால் இத்தகு நூல்களுக்கு ஒரு வகையான மந்திர ஆற்றல் ஏற்படுகிறது என்று சான்றோர் கூறுவர். இந்நூல், பயில்வோர்க்கு எளிமையாகவும், பொருள் விளங்குவதாகவும், இம்மையில் வருகின்ற எல்லா உடற்பிணிகளும், ஊறுகளும் தீர்ப்பதாகவும் அமைந்து அன்பர்களால் பக்தியோடு பயிலப்படுகிறது.

கந்தர்சஷ்டிக் கவசத்தை நினைக்குந்தோறும் நமக்கு முருகப் பெருமானிடத்தில் அன்பு ஏற்படுகிறது. சான்றாக

**"சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்**
**பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை**
**கீதம்பாடக் கிண்கிணி யாட**
**மையல் நடஞ்செய்யும் மயில்வாகனனார்**
**கையில் வேலாலெனைக் காக்க வென்று வந்து**
**வரவர வேலா யுதனார் வருக**
**வருக வருக மயிலோன் வருக**
**இந்திரன் முதலா வெண்டிசை போற்ற**
**மந்திர வடிவேல் வருக வருக**
**நேசக் குறமகள் நினைவோன் வருக**
**ஆறுமுகம் படைத்த ஐயா வருக**
**நீறிடும் வேலவன் நித்தம் வருக**
**சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக"**

என்ற அடிகளை ஓதும்போது யார்தான் பக்திச் செருக்கால் பரவசப்பட மாட்டார்கள்?

திருஞான சம்பந்த சுவாமிகள் முதலிய அருளாளர்களால் போற்றப்பட்ட கண்ணப்ப நாயனார், அவர்தம் பெற்றோர் செய்த முருக வழிபாட்டினால் தோன்றினார் என்று சேக்கிழார் சுவாமிகள் அருளுகின்றார். எனவே அப்பெருமானை

வழிபடுதலால் உளதாகும் பெரும் பயன் இவ்வளவிற்றென்று நம்மால் அளவிட்டு கூறல் ஒல்லுமோ?

கந்தர் அலங்காரம் என்னும் தெய்வீகப்பனுவல் முருகப்பெருமானின் அழகு, தூய்மை, பெருமை, சிறப்பு முதலிய பொருள்களைக் குறிக்கும். ஈண்டு அழகு என்பது நிலைபேறுடைய முருகப்பெருமானது மாறாப் பேரழகேயாகும்.

மாந்தர்தம் அழகு மறையும் நீர்மையது. இறையன்பர்கள் இறைவனது தெய்வீகப் பேரெழிலில் ஈடுபட்டுத் தம்மையிழக்கும் நலத்தைப் பெறுவர்.

**"உன்னைச்சிங் காரித்து உனதழகு பாராமல்**
**என்னைச் சிங்காரித்திடர்ப்பட்டேன் - பொன்னை**
**அரிவையரையே நினையும் அன்பிலேற் குன்தாள்**
**தருவையோ சொக்கநாதா"**

என்று சிவானுபவச் செல்வர் குருஞான சம்பந்தர் அருளுவதைக் காணலாம்.

இக்கந்தர் அலங்காரத்தின் வாயிலாக முருகன் வடிவழகு, அவனது குணவழகு, இளமையழகு, அருள் அழகு முதலிய பல்வகை அழகுகளையும் நாம் துய்த்து ஒருமையுள்ளம் பெற இயலும். முருகப் பெருமானது திருவடி முதல் திருமுகம் ஈறாக உள்ள அருள் உறுப்புக்களின் பேரழகையும், அவரது ஊர்தியின் அழகையும், அவர் கையிற் கொண்டுள்ள படையின் அழகையும், கொடியின் அழகையும் மனங்கொளும் வகையில் அருணகிரிநாதர் தந்தருளியுள்ள இந்நூல் "கந்தர் அலங்காரம்" என்று பெயர் பெற்றது சாலப் பொருந்தும்.

கந்தர் அலங்காரத்தில் காணப்படும் பாடல்களில் சில, இறையனுபவம் முழுமையாகப் பெறுவதற்கு முன்பும், பல, இறையனுபவம் முழுமையாகப் பெற்ற பின்பும் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதை சமய நூற்பயிற்சியுடையார் சிலர் கூறுவர். எனினும் கந்தக்கடவுள் தம்மைத் திருவண்ணாமலையில் ஆட்கொண்டு ஞானோபதேசம் அருளிய பின்னர்தான் அருணகிரிநாதர் இந்நூலை எழுதியிருக்க வேண்டும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

**"அருணை நகர்மிசைக் கருணையொ டருளிய**
**மௌன வசனமும் இருபெரு சரணமும் மறவேனே"**

என்று திருப்புகழில் அருளியுள்ளார்.

இந்நூலில்,

**சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் தொளைத்த வைவேல்**
**மன்ன கடம்பின் மலர்மாலை மார்ப, மௌனத்தையுற்று**
**நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்**
**டென்னை மறந்திருந்தேனிறந்தே விட்ட திவ்வுடம்பே** (பாடல்19)

என்ற பாடலின் வாயிலாகத் தனக்கு ஏற்பட்ட ஞானானந்த அநுபூதியினை அருளியுள்ளார்.

"மௌனத்தை யுறுதல்" எனின் பௌத்தர்கள் கூறும் "வாய்வாளாமை"யைக் குறித்ததன்று, அவர்கட்கு வாய்வாளாமை நிர்வாணம்அடைதற்கொரு சாதனமான அறம். ஈண்டு அருணகிரிநாதர் கூறும் "மௌனம்" என்பது "நிட்டானுபூதி" யாகும். பாதரசம் போலச் சஞ்சலப்படும் மனத்தை இறைவனது திருவருளில், ஒருநிலைப்படுத்தி அவ்வொரு நிலையில் நிலைபெறச் செய்தலாகும். மனம் அருளால் ஆட்கொள்ளப்பட்ட பின்னர் "மெள்ள" "மெள்ள" அம் மனம் தெளிந்து அத்திருவருளோடு கலந்து ஒன்றும், அவ்வொன்றும் செயலே "சிவயோகம்" எனச் சைவ சாத்திரங்கள் கூறும். இச்சிவயோகத்தில் மலம், மாயை, வினைகள் எல்லாம் நீக்கம் பெறும், இப்பாச நீக்கச் செயலில் பூதவொடுக்கம், சீவன் ஒடுக்கம் முதலியன ஏற்பட்டுப் பூதவுடல், நுண்ணுடல், காரணவுடல்களின் செயல்கள் நீங்கும். அமைதி கிளர்ச்சி சோம்பல் என்று சொல்லப்பெறும், முறையே சத்துவம், இராசதம், தாமசத் என்ற குணங்கள் உயிரைவிட்டு விலகும். உயிரின் தற்போதம் அறும். உயிர் அருளில் ஒடுங்கி இறைவனோடு புல்லிப் புணர்ந்து நின்று சிவப் பேரின்பத்தை நுகரும்.

அப்பொழுது உடலின் தாக்கம் உயிர்க்கு ஏற்படுவதில்லை. அந்நிலையில் உடல் இறந்ததெனவே சொல்லலாம். இதனை மாறிப்பிறத்தல் என்று ஞானானந்த அனுபவத்தைப் பெற்றோர் அருளுவர். அத்தகு நினைத்தற்கும் சொல்லுதற்குமரிய இறைபேரின்பத்தில் அருணகிரியார் திளைத்துப் பின்னர் நம்மனோர் உய்யும் பொருட்டு இத்தகு தெய்வீகப்பனுவலை ஞானநிலையில் இருந்து திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

கந்தர் அலங்காரத்தில் காணப்படும் மேற்காட்டப்பட்ட திருவிருத்தமே அவரது இறையனுபவத்தை முழுவதும் காட்டும் திருப்பாடலாகத் திகழ்கின்றது. இதுபோன்ற ஞானப் பாடல்களைத்தான் சான்றோர்கள் ஞானத்தமிழ் என்பர். இறையனுபவம் பெற்று இறைபணியில் உறைத்து நிற்கும் ஞானிகள் மனிதஇனம் படும் வறுமைத் துன்பத்தையும் ஒரொருகால் காண்பர். அஞ்ஞான்று அவர் மனம் மலரினும் மெல்லியதாகலின் உருக்கத்தோடு உலகினரை நோக்கி,

**"தானமென்றும் இடுங்கோள்"-**
என்றும்

**"வையிற் கதிர்வடி வேலோனை**
**வாழ்த்தி வறிஞர்க்கென்றும்**
**நொய்யிற் பிளவேனும்**
**பகிர்மின்காள்** என்றும்

**"இலையாயினும் வெந்தது**
**ஏதாயினும்**
**பகிர்ந்தேற்றவர்க்கே**
**செய்குமினோ"** என்றும்

**"உள்ள போதே கொடாதவர்-**
**இளைத்து**
**வாடிக் கிலேசித்து வாழ்நாளை**
**வீணுக்கு மாய்ப்பவரே"**

என்றும் அறிவுரை கூறிச் செயல்படத் தூண்டுகின்றனர்.

இவ்வாறு அருளியலும் உலகியலும் இணைத்துக் கூறும் நூலாக இந்நூல் விளங்குகின்றது.

கந்தர் அலங்காரப் பாடல்கள் நம் உள்ளத்தை உருக்குவனவாகவும் முருகப் பெருமானின் திருவடிக்கு அன்பை விளைவிப்பதாகவும் இருப்பதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக,

**"நாளென் செயும்வினை தானென்**
**செயுமெனை நாடிவந்த**
**கோளென் செய்யுங் கொடுங்**
**கூற்றென் செயுங்குமரேசரிரு**
**தாளுஞ் சிலம்புஞ் சதங்கையும்**
**தண்டையுஞ் சண்முகமுந்**
**தோளுங் கடம்பு மெனக்குமுன்**
**னேவந்து தோன்றிடினே"**

**"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்**
**பாதங்கள் மெய்ம்மை குன்றா**
**மொழிக்குத் துணைமுருகாவெனு**
**நாமங்கள் முன்புசெய்த**
**பழிக்குத் துணையவன் பன்னிரு**
**தோளும் பயந்ததனி**
**வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்**
**கோடன் மயூரமுமே"**

என்னும் அருமைமிகு பாடல்களில் காண்க.

இந்நூலைப் பயில்வதால் உண்டாகும் நலன்களையெல்லாம் 101ஆம் பாடலில் காணலாம். இவ்வலங்காரப் பாடல்கள் நூற்றுள் ஒரு கவிதானும் கற்றறிந்தவர், சினமிகுந்த அரசனுக்கஞ்சார், யமன் கலகத்திற்கு அஞ்சார், நரகக்குழி அணுகார், துட்டநோய் வாய்ப்படார், புலிக்கும், கரடிக்கும், யானைக்கும் கலங்கார் என்று அருணகிரிநாத சுவாமிகள் அருளியுள்ளார்.

**"சலங்காணும் வேந்தர் தமக்கும்**
**அஞ்சார்:**


**யமன் சண்டைக் கஞ்சார்;**

**துலங்கா நரகக் குழியணுகார்;**
**துட்டநோய் அணுகார்;**

**கலங்கார் புலிக்கும் கரடிக்கும்**
**யானைக்கும்; கந்தன் நன்நூல்**

**அலங்காரம் நூற்றுள் ஒரு கவிதான்**
**கற்று அறிந்தவரே"**

மக்கள் இம்மையின்பமும் மறுமையின்பமும் வாய்க்கப்பெற இறைச்சார்புடைய இஞ்ஞான நூல்களை இடைவிடாது பயில்வார்களாக.



டாக்டர் திருமதி இராதா தியாகராசன்,
எம்.ஏ., பிஎச்.டி.,

# இன்பமே எந்நாளும் துன்பமில்லை

திரு.மு.விஜயரங்கதுரை
உதவி ஆணையர்

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்

ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை

சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்

தாயினும் நல்லன் தாழ்சடை யோனே!

திருமூலரின் சிந்தனைகள் என்ற பொருளில் உங்கள்முன்பாக உரை நிகழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். முதலில் திருமூலர் என்பவர் யார் என்பதைப் பார்ப்போம். கயிலாய மலையிலிருந்து அகத்திய முனிவரைச் சந்திக்கப் புறப்பட்டு. தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகாமையில் உள்ள திருவாவடுதுறையில் உள்ள அரசமரத்தடியில் 3000 ஆண்டுகள் தங்கி ஐந்தெழுத்து மந்திரத்தினைச் சிந்தித்து சிவபூஜை செய்து கடுமையான தவம் இயற்றி யோக நிலையிலேயே இருந்து கொண்டு மூவாயிரம் ஆண்டு காலம் வாழ்ந்து மூவாயிரம் பாடல்களை இயற்றி சிவபெருமான் திருவடிபேற்றினைப் பெற்றவர் என்பது வரலாறு.


அதுமட்டு மல்லாமல், தவம் செய்வதற்கு முன்னர் ஒரு மாடு மேய்க்கும் மூலன் என்னும் வாலிபன் பாம்பு கடித்து இறந்துவிடவே, அங்குள்ள மாடுகளும், கன்றுகளும், ஆடுகளும், இறந்துபோன மூலன் உடலைச் சுற்றிச் சுற்றி வந்து முகந்து பார்த்து கண்களில் நீர் ஆறாகப் பெருகி நிற்க, அதைக் கண்ணுற்ற திருமூல நாயனார் மனம் பொறுக்காமல் தன்னுடைய உடலை ஒரு மரப்பொந்தில் வைத்துவிட்டுத் தன் உயிரை மூலனின் உடம்பில் செலுத்தி மாடு மேய்க்கும் மூலனை உயிர்பெறச் செய்தார். பின்னர் தன்னுடைய உடம்பு காணாமற் போகவே மூலன் உடம்பிலேயே இருந்துகொண்டு தவம் செய்ததாகவும், திருமந்திரமாலை என்னும் சைவ சமய சாத்திர நூலை அருளியதாகவும் அறியப்படுகிறது. இதனைத் திருத்தொண்டர் புராணத்தில் தெய்வத்தமிழ் சேக்கிழார்.

''ஊனுடம்பிற் பிறவி விடந்தீர்த்துலகத்தின்

ஞான முதல் நான்கு மலர் நற்றிருமந்திரமாலை

பான்மை முறை ஓராண்டிற் கொன்றா பரம்பொருளாம்''

நலஞ்சிறந்த ஞான யோகக் கிரியா சரியையெலாம் மலர்ந்த மொழித்திருமூலத் தேவர் மலர்க்கழல் வணங்கி,



என்று வியந்து போற்றுகின்றார். திருமூல நாயனாரின் திருமந்திரமாலை 10ஆம் திருமுறையாக இடம் பெற்றுள்ளது. திருமூல நாயனார் 63 நாயன்மார்களில் ஒருவர் என்ற சிறப்பினையும் பெற்றிருக்கின்றார். சைவ சமயம் உலகத்தின் தாய் சமயம் என்பர் பெரியோர். சைவ சமயம் நிறுவியிருக்கக்கூடிய சமரசம் அல்லது மனித நேய சிந்தனைகளும், நன்னெறி அல்லது சன்மார்க்க கொள்கைகளும் ஆகும்.

முக்தி என்பது கூட தமக்காக மட்டுமல்லாமல் உலகில் பிறந்திருக்கக்கூடிய

அத்தனை உயிர்களும் உய்வடைய வேண்டும் என்பதே என்ற நோக்கத்தினைக் கொண்டிருக்கக் கூடிய, உலகில் வேறெங்கும் காண முடியாத ஒரே சமயம் சைவ சமயம் என்பதைத் திருமூல நாயனார் தமது பல மந்திரங்களில் பதிவு செய்துள்ளார்.

மேன்மைகொள் சைவ நீதியே உலகிற்கு என்றும் நிரந்தரம் என்று கூறவந்த திருமூலர்,

**''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே**
**சென்றே புகும்கதி இல்லை நும் சித்தத்து**
**நின்றேநிலை பெறநீர் நினைந்து உய்மினே''**

என்று ஒரு மகத்தான ஆன்மிகப் புரட்சி இயக்கத்தினைத் தோற்றுவித்தார். இதைவிடச் சிறந்த வேதாந்த, சித்தாந்த கருத்துக்களை வேறு எந்தச் சமயத்திலும் நம்மால் காணமுடியாது, இன்று உலகில் எங்கு பார்த்தாலும், எப்போதும் மதவாதத்தின் பெயராலும், தீவிரவாதத்தின் பெயராலும் போட்டி பொறாமையின் காரணமாகவும், மொழி இன வாதத்தின் வெறி காரணமாகவும், ஆண், பெண் வர்க்கப் போராட்டங்களுமே மனித குலத்தை அன்றாடம் துடிதுடிக்க வைக்கும் அவலமாகக் காட்சியளிக்கிறது.

அதற்கு ஒரே உபாயம் திருமூலர் கண்ட தீர்க்க தரிசனம் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்னும் மந்திரம் என்பதைப் பார்க்கிறோம்,

திருமூலரின் சிந்தனைகள் இன்று உலக அளவில் ஏற்கப்பட்டு, அங்காங்கே இரத்ததானம், கண்தானம் போன்ற இயக்கங்களும் இலவசகல்விக் கூடங்களும், மருத்துவமனைகளும், கருணை இல்லங்களும் மனித குலத்திற்கு நம்பிக்கையூட்டும் நட்சத்திரங்களாகத் திகழ்கின்றன,

'''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்று 2-வது திருமந்திரத்தில் திருமூலர் மனித குலத்திற்கு அறைகூவல் விடுகிறார். அதாவது மனிதனாகப் பிறந்த பிறவியின் நோக்கமே சிற்றின்பமோ, பேரின்பமோ தாம் மட்டும் பெறும் சுயநலத்துக்காக அலையாமல் தன்னைப் போன்ற மற்ற மனிதர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார்,

**''யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு ஒரு இன்னுரைதானே''**

என்று திருமூலர், மனிதன் ஆற்ற வேண்டிய மனித குல தர்மம் பற்றி விளக்கம் அளித்துள்ளார். அருட்பிரகாசவள்ளலார். இராமலிங்க சுவாமிகள் ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்பார். இதுவே மனித நேய சிந்தனையின் உச்சக்கட்டம். இதனையே பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் திருமூல நாயனார், மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் உணவு அளித்துப் பசி தீர்க்க வேண்டும் அல்லது ஒன்றுமில்லையென்றால் ஒரு இனிமையான மொழியாவது பேசவேண்டும் என்று உபதேசிக்கின்றார்.

**''ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்துண்மை பேசி**
**உப்பிலா கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்**
**முப்பழமோடு பாலன்ன முகங்கடுத்தி டுவாராயின்**
**கப்பிய பசியொடு கடும்பசி யாகுந்தானே''**

என்று சங்ககாலப் பாடல் விருந்தோம்பலின் அவசியத்தையும் நமது இந்தியத் திருநாட்டின் பண்பாட்டினையும் தமிழகத்தின் பண்பாட்டினையும் பறை சாற்றுகின்றது.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர்**
**அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு**

**என்பார் வள்ளுவப் பெருந்தகை.**

இன்றைய காலக் கட்டத்தில் உலகில் எங்கு பார்த்தாலும், வன்முறை கலாச்சாரம், எங்கு பார்த்தாலும் ஆயுத கலாச்சாரம், எங்கு பார்த்தாலும் வன்கொடுமைகள், பலாத்காரம் என்று மனித குலம் தன்னுடைய பண்பாட்டினை இழந்து பாதுகாப்பற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய நிலையில் திருமூல நாயனார், இதற்கு நிரந்தரமாக ஒரு மாற்றுவழி கண்டார்.

அன்பு நெறியே மனித குலம் தப்பிக்க ஒரே மாற்று வழி என்று கூவல் விடுகின்றார்.

**''அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**

**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**

**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''**

என்று எல்லா பிரச்சனைகளுக்கும் ஒரு முடிவு கட்டுகிறார்.

ஆகவே நாமும் இனி வருங்காலங்களில் சமுதாயப் பிரச்சனைகளைத் திருமூலர் சிந்தனையின் அடிப்படையில் அன்பு நெறியில் தீர்க்க முற்படுவோமாக.

**படமாடக் கோயில் பகவதற்கு ஒன்று ஈயில்**

**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா**

**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**

**படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே''**

சிவாலயத்தில் எழுந்தருளியிருக் ககக்கூடிய சிவபெருமானுக்குப் படைக்கும் நைவேத்தியம் அவருக்கு மட்டுமே உரியதாகும், ஆனால் சிவாலயத்திற்கு வெளியே இருக்கக்கூடிய சிவனடியார்களுக்கு முதலில் உணவு படைத்துவிட்டு அவர்கள் அதை அமுதுசெய்து, சிவார்ப்பணம் செய்த பின்னரே. சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குப் படைக்கப்படும் நைவேத்தியம் ஏற்றுக் கொள்ளப்படும் என்று திட்டவட்டமாகக் கூறினார் திருமூலர்.

ஒருமுறை சுவாமி விவேகானந்தர், இராமேஸ்வரம் சென்றிருந்தபொழுது அவரிடம் ஒருவர் கேட்டார். வெறும் சிவசின்னங்களை மட்டும் அணிந்து கொண்டு, விபூதிப் பட்டைகளையும் உருத்திரங்க மாலைகளையும் அணிந்து, சிவாலயத்திற்குச் சென்று வந்தால் போதுமானதா? சிலர் வெறும் சிவவேடத்தை மட்டும் கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மையில் மனித நேயம் கொஞ்சம்கூட இல்லை என்று கேள்வி எழுப்பினார். அதற்கு உடனே சுவாமி விவேகானந்தர் சட்டென்று சொன்னார்.

வெறும் விபூதிப் பட்டைகளை மட்டும் உடம்பு முழுவதும் அலங்காரம் செய்து கொண்டு. சிவ தீட்சைபெற்றுக் கொண்டு சிவபூஜை செய்து வந்தாலும், சிவ வேடம் தரித்தாலும், அவரிடத்திலே சைவ சமயத்திற்கே உயிர்நாடியான மனிதநேய தர்மம் என்ற சாதனை இல்லையென்று சொன்னால், அவருக்கும் சிறுத்தைக்கும் எவ்விதமான வேறுபாடும் இல்லை. சிறுத்தையின் உடம்பு பூராவும் அதே கோடுகள் பட்டைப்பட்டையாக உள்ளன. அதற்குப் பதிலாக வெறும் சிவவேடத்தைக் கொண்டிருக்கக் கூடிய இந்தப் போலி சிவனடியாரிடம் மகேஸ்வர பூஜை இல்லாத காரணத்தினால் இவரும் ஒரு நடமாடும் சிறுத்தைக்குச்சமமானவர்.

சிறுத்தையின் இயல்பு தன்னுடைய சுயநலத்துக்காகப் பிற உயிர்களைக் கொன்று சாப்பிட்டு தன்னுடைய உயிரை வளர்க்கிறது. இவர்கள், மாமிசஉணவுகளைச் சாப்பிட்டும், பிறருக்கு எந்தவொரு உபகாரமும் செய்யாமல் தன்னுடைய சுயநலத்துக்காகவே வாழ்ந்து விலங்கியல் வாழ்க்கையிலேயே தன்னுடைய வாழ்க்கையை வீணடிப்பவர் என்று சைவ சமயத்தின் மேன்மையைப் பறைசாற்றுகின்றர்.

ஆகவே, திருமுலரால் சொல்லப்பட்ட கருத்துக்களை எல்லாம் அன்றாடம் சிந்தித்து திருமூலரை வாழ்வில் வழிகாட்டி என்று எண்ணி வாழ முற்படுவோமாயின்

''இன்பமே எந்நாளும் துன்பமில்லை.''

# குலசேகராழ்வாரும் திருவரங்கனும்

முனைவர் ஈ.பரந்தாமன்

- சென்ற இதழ் தொடர்ச்சி

கைகள் என்று கொலோ கூப்பும் நாளே!

குலசேகராழ்வார் கடந்த மூன்று பாசுரங்களில் தனது கண்கள் திருவரங்கனைக் கண்டு களிக்கும் எந்த நாளோ! வாய் அவன் புகழை வாழ்த்தும் நாள் எந்த நாளோ! திருவரங்கன் திருவடிகளில் மலர்களிட்டு அடியவர்களோடு அணுகும் நாள் எந்த நாளோ! என்று பக்தி மிகுதியால் ஏங்கியதைக் கண்டோம்.

கேசி என்ற அசுரன் குதிரை வடிவில் வந்து கோகுல மக்களைத் துன்புறுத்தியபோது, கண்ணன் அஞ்சாது சென்று அதனை அடக்கி அதன் வாயினைப் பிளந்து அழித்தான். கடல் போன்று நீல நிறவண்ணன் அக்கண்ணன். இந்திரனுக்கு அளித்த வழிபாட்டினை நிறுத்தி கோவர்த்தன மலைக்கு அளிக்கச் செய்தான் கண்ணன். அதனால் கோபம் கொண்ட இந்திரன் வருணன் மூலமாக ஏழு நாட்கள் விடாத கல் மழையைப் பெய்வித்து கோகுலத்தையும், அன்பர்களையும் மக்களையும் துன்புறுத்தினான். கண்ணன் கோபர்த்தின மலையை எடுத்து கோகுலத்தையும், கோபர்களையும், கோக்களையும் காத்து அருளினான். இப்படி ஆயர்களைக் காத்த வலிமைமிக்க காளை போன்றவன் கண்ணன். **"கல்லெடுத்துக் கல்மாரி காத்தவன்"** கண்ணன். தேவர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குபவன் திருமால் **"அயர்வரும் அமரர்கள் அதிபதி"** (திருவாய்மொழி) திருமால், அழகிய தமிழின் இனிய பாசுரங்களாக விளங்குபவன்.

"அற்றது பற்றெனின் உற்றது வீடு" (திருவாய்மொழி) எனும் நம்மாழ்வரின் அருளிச் செயலுக்கிணங்க, திருநாடாகிய ஸ்ரீ வைகுண்டம் அடைய ஆவலுடையவராகி, இவ்வுலக இன்பங்களில் பற்றினை நீங்கிய



வராகிய முனிவர்கள் வாழுகின்ற திருவரங்கத்தில், திருவரங்கனாக அரவணையில் பள்ளி கொண்டுள்ளான். திருமால். அத்தகைய தேவாதிதேவனை நாக்கு தழும்ப எழும்படி வாழ்த்தி, தனது கைகள், மணம் மிக்க மலர்களை, அவன் திருவடிகளில் இட்டு, கை கூப்பி வணங்கும் நாள் எந்த நாளோ என்று ஏங்குகின்றார் ஆழ்வார். இப்பாசுரத்தில் நாக்கின் பலனையும் கைகளின் பலனையும் கூறுகின்றார் குலசேகராழ்வார்.

**மாவினை வாய்பிளந்து அகந்த மாலை வேலை**

**வண்ணனை என்கண்ணனை - வன்குன்றமேந்தி**

**ஆவினை அன்று உய்யக் கொண்ட ஆயர்ஏற்றை**

**அமரர்கள் தம் தலைவனை அந்தமிழின் இன்பப்**

**பாவினை - அவ்வடமொழியைப் பற்றற்றார்கள்**

**பயில் அரங்கத்து அரவணையில் பள்ளிகொள்ளும்**

**கோவினை நாவுற வழுத்தி என்றன் கைகள்**

**கொய் மலர்தூய் என்றுகொலோ கூப்பும்நாளே!**

(பெருமாள் திருமொழி 1-4)

மலர்ச் சென்னி என்று கொலோ வணங்கும் நாளே

இசைக்கலையில் வல்லவர்களாகிய தும்புருவும், நாரதரும் யாழ்கொண்டு இன்னிசைபாடி திருவரங்கனை வணங்குகின்றனர். தனக்கு ஒப்பில்லாத பழமையான நான்குவேதப் பாடல்களை திருமாலின் கொப்பூழில் தோன்றிய தாமரைத் தண்டில் மலர்ந்துள்ள தாமரை மலரில் தோன்றிய நான்முகன் எப்பொழுதும் போற்றிப் புகழ்கின்றான்.

இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டு மிகுந்த பலநிற ஒளிகளை வீசும் மாடங்களை உடைய மாளிகைகள் பல மிளிர்கின்ற திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள திருமால், பலவிதமான இரத்தினக் கற்கள் வீசும் ஒளியுடன் எழில் கூட்டப் படுத்திருக்கும் திருவரங்கனின் திருவடிகளில் என் தலையை வைத்து,



வணங்கும் நாள் எந்த நாளோ என்று ஏங்குகின்றார்.

**இணையில்லா இன்னிசை யாழ்கெழுமி இன்பத்**

**தும்புருவும் நாரதரும் இறைஞ்சி ஏத்த**

**துணையில்லாத் தொன்மறை நூல் தோத்திரத்தால்**

**தொன்மலர்க்கண் அயன்வணங்கி ஓவாது ஏத்த**

**மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ**

**மதின் அரங்கத்து அரவணையில் பள்ளிகொள்ளும்**

**மணிவண்ணன் அம்மானைக் கண்டு கொண்டு என்**

**மலர்ச்சென்னி என்று கொலோ! வணங்கும் நாளே!**

(பெருமாள் திருமொழி 1-4)

இப்பாசுரத்தில், திருவரங்கன் திருவடிகளில் விழுந்து வணங்குவதே தலை பெற்றதன் பயன் என்று கூறுகின்றார் ஆழ்வார்.

திருவடிகடிகளில் விழுந்து வணங்குவதைத்தான் சரணாகதி என்பர். இப்படி முழுமனதுடன் திருவரங்கனை

நம்பிக்கையுடனும், உறுதியுடனும் வணங்கி, உன் திருவடிகளைவிட எனக்கு வேறு கதியில்லை யென்று கூறி சரணாகதி செய்தால் திருவரங்கன் தவறாமல் காத்து அருளுவான். இதனையே இராமபிரான், காகாசுரன், விபீடணன், சுக்ரீவன் ஆகியோர் சரணாகதியில் மெய்ப்பித்துக் காட்டினான்.

அப்படியின்றி எம்பெருமான் கைவிட்டாலும், அகலகில்லேன் இறையுமென்று திருமார்பில் உறைகின்ற திருமகள் பரிந்துரை செய்து காப்பாள். அவளே கைவிட்டாலும் எம்பெருமான் திருவடி கைவிடாது தன்னிடத்தில் சரணாகதி செய்தவனைக் காப்பாற்றியே ஆக வேண்டும் என்று திருமாலிடம் வாதிட்டு, காக்கச் செய்யுமாம் இதனை

**அவன் (திருமால்) விடினும், அவள் (திருமகள்) விடினும்**

**அது (திருவடி) விடாது திண்கழலாக இருக்கும்"**

என்கின்றனர்.

ஒருவன் அறிவுரையால் திருந்தவில்லையென்றால், அவனைக் கொம்பு கொண்டு அடித்தால் திருந்துவான் என்றும், அந்த அடி அவனைத் திருத்த உதவுவதைப் போல; அவன் அண்ணனோ தம்பியோ கூட உதவ மாட்டார்கள் என்பதும் நம்முன்னோர் கருத்து. இது சாதாரண கருத்து.

**"அடி உதவுவது போல அண்ணனும் தம்பியும் கூட உதவ மாட்டார்"**

ஆனால் இப்பழமொழியின் உள்ளுறை கருத்து திருமாலின் திருவடிகளில் ஒருவன் சரணாகதி செய்தால், அத்திருவடி உதவி புரிந்து அவனைக் காக்கும். ஆனால் அவனது அண்ணனோ, தம்பியோ உதவ மாட்டார்கள்.

திருமாலின் திருவடிப் பெருமைகளைக் காண்போம்.

1. அடியவரைக் காக்கும் திருவடி

2. மாவலியிடம் மூன்றடி மண் வேண்டி விண்ணுலகையும் மண்ணுலகையும் அளந்த திருவடி

3. மூன்றாவது அடியாக மாவலியின் தலை மீது வைத்து பாதாள உலகம் அனுப்பிய திருவடி

4. பரதாழ்வான் தலையில் சுமந்த திருவடி

5. குகன் திருமஞ்சனம் செய்த திருவடி

6. நான் முகன் திருமஞ்சனம் செய்த திருவடி

7. கங்கையைத் தோற்றுவித்த திருவடி

8. கல்லைப் (அகலிகையை) பெண்ணாக்கிய திருவடி

9. காளிங்கன் தலை மீது நடனமாடிய திருவடி

10. கோகுலத்தில் காடுமேடெல்லாம் திரிந்து கன்று காலிகளை மேய்த்த திருவடி

11. சீதையைத் தேடி அலைந்த திருவடி

12. திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருந்தபோது காவிரி தன் திரைக் கைகளால் வருடிய திருவடி

13. செந்தாமரை மலர் போன்ற சிவந்த திருவடி


14. திருமகளும், மண்மகளும் வருடிய திருவடி

15. அருச்சுனனை அரவக்கணையிலிருந்து காக்க தேரினை பூமியில் அழுத்திய திருவடி

16. கிருஷ்ணாவதாரத்தின் இறுதியில் வேடன் அம்பால் அடிபட்ட திருவடி

இன்னும் எத்துணையோ சிறப்புகளைப் பெற்றதால் ஆழ்வார் திருவரங்கனின் திருவடிகளில் விழுந்து வணங்கும் நாள் எந்த நாளோ! என்று ஏங்குகின்றார். நாமும் திருமால் திருவடிகளை வணங்கி, அவன் அருள்பெற்று உய்வோமாக!

தொடரும்.



திருமால் திருவடி

# ஓதற்கரிய திருஞானம் ஓதுதல்



திருநெறிய தெய்வத் தமிழ் வேதமாகத் திகழ்பவை பன்னிரு திருமுறைகளாகும். அவற்றில் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என்று அழைக்கப்படுகின்றன. தேவாரம் என்பதற்குத் தெய்வத்தின் இருப்பிடம் என்பது பொருள். (தேவர் + வாரம்= தேவர்தம் இருப்பிடம்)

தேவாரத்தை தென் மாவட்டங்களில் திருஞானம் என்று அழைத்து வந்துள்ளனர். அது ஞானத்தால் விளைந்த நூலாதலின் அப்பெயர் பெற்றதென்பர், திருஞான சம்பந்தர் சிவசக்தியரின் அருள்பெற்று தேவாரம் பாடத் தொடங்கியதை விளக்கிக் கூறும் சேக்கிழார் பெருமான் வரலாற்றில் ஞானம் என்ற சொல்லைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதைக் காண்கிறோம். அதில், சிவபெருமான் உமையுடன் தோன்றி திருஞான சம்பந்தருக்குக் கழல்பேணும் ஒரு நெறியில் வருஞானம் கொடுப்பதற்கு வந்தார் என்றும், அப்படி வந்து ஊட்டியதை,

**"எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி**
**உண்அடிசில் என ஊட்ட உமையம்மை எதிர்நோக்கும்**
**கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற் பொற்கிண்ணம் அளித்து**
**அண்ணலை அங்கு அழுகை தீர்த்து அங்கணார் அருள்புரிந்தார்"**

(எண்ணுவதற்கரிய சிவஞானத்தைப் பாலில் குழைத்து உண்க என்று அம்பிகை ஊட்டி கண்ணீரைத் துடைத்து அழுகையை நிறுத்தி சிவபெருமான் அருள்புரிந்தார்) என்றும்.

அப்படி அளிக்கப்பட்ட பாலை உண்ட அளவிலேயே ஆளுடைய பிள்ளையார் அகில உலகிலுள்ள தேவர்களும் முனிவர்களும் தெரிந்து கொள்வதற்கு அரிதான சிவஞானத்தில் தெளிந்து சிவஞானசம்பந்தர் ஆயினார் என்றும், அம்மாற்றத்தால்.

**சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம்**
**பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர்சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்**

என்றும் சம்பந்தர் பெற்ற அருள்ஞான அனுபவத்தையும் குறித்துள்ளார்.

அவருடைய அருள் அனுபவம் பாட்டாக வெளிப்பட்டதை உயர்ஞானத் திருமொழியால் தோடுடைய செவியன் எனும் மெய்மை மொழிப் பதிகம் பாடினார் என்றும், அது சிவானந்தப் பெருக்காறு போன்றது என்றும் குறித்துள்ளார்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆளுடைய பிள்ளையாரை வளர் சிவஞானம் என்றும்: தெய்வ ஞானக் கன்று என்றும் கூறிப் போற்றியுள்ளார்.

இந்த வரலாற்றுப் பகுதியில் ஞானம் என்ற சொல் திரும்பத் திரும்பக் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதையொட்டியே தேவாரத்திற்குத் திருஞானம் என்ற பெயர் வழங்கி வந்ததை உணர முடிகிறது. பின்னாளில்தான் தேவாரமென்றும் திருமுறைகள் என்றும் பெயர்கள் வந்தன.

இனி தேவாரத்தைத் திருஞானம் என்று அழைத்துச் சிறப்பிக்கும்

கல்வெட்டொன்றைக் காணலாம்.

இக்கல்வெட்டு திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1233) காலத்தில் பொறிக்கப்பட்டதாகும். இதில் உள்ள செய்தியின் சுருக்கம் மேற்கண்ட மன்னனின் மைத்துனன் விக்கிரமசோழன் நெல்லையப்பர் ஆலயத்தில் தேவாரம் பாட (திருஞானம் ஓத) பதினோரு பேர்களை நியமித்து அவர்களுடைய பெயரைப் பொறித்துள்ளதைக் குறிப்பதாகும்.

இவர்களின் பெயர்கள் நமக்குப் பல வரலாற்று உண்மைகள் அறிந்து கொள்ள உதவியாக உள்ளது. எனவே, இவர்களுடைய பெயர்களைக் காணலாம். இவை

1. விஷகண்டதேவர் சந்தானத்து எல்லையில்லாத தேவர் சீடரில் தவப் பெருமானுக்கும்

2, வீர சந்தானத்து மகாதேவர் சிஷ்யரில் அடையானுக்கும்

3. வடக்கில் மடத்து சிவபாத இருதயர் சிஷ்யரில் நட்டப் பெருமானுக்கும்

4. பிக்ஷா மடத்து இராவளர் - இராவளர் பசுபதிதேவர் சிஷ்யரில் நிறையங்கை ஆடுவான்

5. திருவாரூர் வடக்கில் மடத்து ஸ்ரதேவர் சிஷ்யரில் வந்தான் தேவகன் தேவனுக்கும்

6. பிக்ஷா மட சந்தானத்து திருநாகீஸ்வரத்து இராவளர் சிஷ்யரில் திருஞான சம்பந்தனுக்கும்

7. இச்சந்தானத்து இராவளர் பசுபதிதேவர் சிஷ்யரில் திருநெல்வேலி உடையானுக்கும்

8. திருநெல்வேலி மாளிகை மடத்து அழகிய நாயகர் சந்தானத்து உய்யக் கொண்டா தேவரின் சிஷ்யர் திருநெல்வேலி உடையானுக்கும்

9. பிக்ஷா மட சந்தானத்து இராவளர் பசுபதிதேவர் சிஷ்யரில் சிவமுக்தி காட்டினானுக்கும்

10. திருநெல்வேலி தெற்கில் மடத்து கீழை மட சந்தானத்து அனுக்க வன்தொண்டன் சிஷ்யரில் அறமுறைத்த பெருமானுக்கும் என்பனவாகும்

இப்பெயர்களின் மூலம் அந்த நாளில் சைவ மடங்கள் புகழ் பெற்றிருந்ததை அறிய முடிகிறது. இப்பெயர்களின் மூலம் வடக்கில் மடம், பிக்ஷா மடம், திருவாரூர் வடக்கில் மடம், திருநெல்வேலி மாளிகை மடம், திருநெல்வேலி தெற்கில் மடம் முதலிய மடங்கள் இருந்ததை அறிகிறோம்.

இம்மடங்களில் ஆகம வழியாக தீக்ஷை பெற்ற சமயக் குருமார்கள் தங்கி இருந்ததையும், அவர்கள் திருமுறைகள் கூறும் பெயர்கள் பூண்டிருந்ததையும் அறிகிறோம். இந்தக் குருமார்களின் சீடர்கள் தபஸ்விகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் திருமுறைகள் ஓதுவதையும் சிவாலயங்களுக்குச் சென்று சிறப்புப் பணிகளை மேற்கொண்டு ஒழுகினர் என்பதையும் அறிகிறோம்.

இக்கல்வெட்டில் இந்த தபஸ்விகள் தனிமடம் கட்டிக் கொள்ளவும் அங்குத் திருஞானம் ஓதவும், விளக்கு எரிக்கவும், நிலம் அளிக்கப்பட்டிருந்த செய்தி கூறப்பட்டுள்ளது. இவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் ஞானப்புறம் என்றழைக்கப்பட்டன. இவை ஞானமயமான நூல்களை ஓதுவதற்காக அளிக்கப்பட்டது என்பதால் ஞானப்புறம் எனப் பெயர் பெற்றதென்பர்.

குருமார்களும் தபஸ்விகளும் சூடியிருந்த பெயர்கள் நமது சிந்தனைக்கு விருந்தாக அமைகின்றன. திருஞான சம்பந்தன், சிவபாத இருதயர், அழகிய நாயகன், உய்யக் கொண்டான், சிவமுக்தி காட்டுவான். அணுக்கன், வன்தொண்டன், அறமுரைத்த பெருமான் என்பன குறிப்பிடத் தக்கவைகளாகும்.

ஆகம வழி தீக்ஷை மேற்கொள்ளாதோர் தபஸ்விகள் என்று அழைக்கப்பட்டதாகக் கருத இடமுள்ளது. இக்கல்வெட்டின் மூலம் தேவாரத்தைத் திருஞானம் என்றே அழைத்தனர் என்பதையும், அதற்கெனத் தனிமடங்கள் ஏற்படுத்தியதையும் அறிகிறோம்.

# திருவதிகை கோவிந்த விண்ணகரம் சரநாராயணப் பெருமாள்

புதுப்பேட்டை வ. கோவிந்தன்.எம்.ஏ.




திருவதிகை என்றாலே முப்புரமெரித்த வீரட்டானேஸ்வரர் திருக்கோயில்தான் எல்லோருக்கும் நினைவிற்கு வரும்.

இது என்ன... திருவதிகை கோவிந்த விண்ணகரம் என்று ஆச்சரியப்பட வேண்டாம். இது அருள்மிகு சரநாராயணப் பெருமாள் கோயில் கட்டப் பெற்றபோது இடப்பட்ட பழம் பெயராகும். சிவபெருமான் முப்புரமெரித்த போது இப்பெருமாள் சரம் (அம்பு) எடுத்துக் கொடுத்ததால் 'சரங்கொடுத்த பெருமாள்' 'சரநாராயணப் பெருமாள்' என புராணத்தின் வழியே இத்தலம் புகழப்படுகிறது.

'திருவதிகை கோவிந்த விண்ணகர் நின்றருளிய பரம சுவாமிகள் என்று இக்கோயில் கல்வெட்டுகளில் கூறப் பட்டுள்ளது. கி.பி. 6-7ஆம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் கட்டப் பெற்ற இக்கோயில், சோழர், பாண்டியர் காலம் வரை நன்கு பராமரிக்கப்பட்டு வந்து தற்போது சிறப்பு பெற்ற கோயிலாகத் திகழ்கிறது.

**திருக்கோயில் அமைப்பு:** கிழக்கு நோக்கி அமைந்துள்ள திருக்கோயிலில் கிழக்கு நோக்கிய கருவறையில் கோவிந்த விண்ணகர் பரமசுவாமிகளான பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார்.

**தல வரலாறு:**

பிராட்டியாகிய ஸ்ரீ தேவியை தமது மகளாக அடைய வேண்டும் என மார்க்கண்டேய மாமுனிவர் திருமாலைத் துதித்துத் தவமியற்றி, அவ்வாறே தாய் வயிற்றில் பிறவாத (அயோநிதி) திருமகளாக அவளை அடையப் பெற்றார். அதன் பிறகு இத்தலத்தில் ஸ்ரீ தேவியை நாராயணருக்கு மணம் செய்து கொடுத்ததாக இத்தலத்தின் புராணம். எனவே இங்குள்ள மூலவரான பெருமாள் உப்பிலியப்பனாகிய சீனிவாசப் பெருமாளைப் போன்று திருமணக்கோலத்தில் நின்றருளியபடி காட்சி தருகிறார். அருகில் மார்க்கண்டேய மாமுனிவர், தம் எண்ணம் ஈடேறிய மகிழ்ச்சியுடன்காட்சி தருகிறார்.

சிவபெருமான் முப்புரமெரித்தபோது அம்பு கொடுத்ததைப் போன்றே, திருவக்கரையில் பராசக்தியானவள் காளி உருவெடுத்து வக்கரசூரனை அழித்தபோதும் பெருமாள் நரசிம்ம மூர்த்தியாகி அம்பாக (சரமாக) இருந்து சூரனை அழித்துவிட்டு அதிகைக்கு வந்து மகிழ்ச்சியால் ஓய்வெடுக்கச் சயனித்ததாகப் புராணம் கூறுகிறது.

இக்கோயில் இடம் பெற்றுள்ள முதல் கல்வெட்டின் காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டாகும். கி.பி. 939லிருந்து 966 வரை அரசாண்ட கன்னரத் தேவனின் கல்வெட்டு ஒன்று இப்பகுதியை 'மேற்கா நாடு' என்று கூறுகிறது. கடலை கிழக்கு எல்லையாகக்

கொண்டு கடலுக்கு மேற்கே உள்ள நாடாக இந்நாடு இருந்ததால் மேற்கா நாடு எனக் கூறப்பட்டுள்ளது.

முதலாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து இப்பெயர் நீக்கப்பட்டு 'திருமுனைப்பாடி நாடு' என இப்பகுதி வழங்கப்பட்டது.

மூலவர் சரநாராயணப் பெருமாள் என்ற பெயருடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். வலப்பக்கம் தாயார் நின்ற கோலம். இடப்பக்கம் மார்க்கண்டேயன் என்றும் பதினாறு போல் உயரம் குறைந்த சிறிய அளவில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.

தாயார் பெருமாளின் வலப்பக்கத்தில் தனிக்கோயிலில் அருளாட்சி புரிகிறார். செங்கமலத் தாயாராகிய ஹேமாம்புஜவல்லித் தாயார் அமர்ந்த திருக்கோலத்தில் உள்ளார். பிரதிமாதம் உத்திரம் அன்று அவளுக்கு திருமஞ்சனம் நடைபெறுகிறது.

**சயன நரசிம்மர் :** வேறெங்கும் இல்லாத காண்பதற்கரிய சயன நரசிம்ம மூர்த்தி தெற்கு நோக்கிப் பாம்பணையில் சாய்ந்து கொண்டுள்ளார் வலக்கை தலையைத் தாங்கும்படியாகவும், இடக்கை இடது தொடைமீது படிய வைத்தும் மற்ற இரு கைகளில் சங்கு சக்கரத்தை ஏந்தியும் உள்ளார். திருப்பாதங்களைத் தாமரை மலர் தாங்கியுள்ளது. தாயார் உடனிருப்பதால் இத்திருக்காட்சி போக சயனம் எனப்படுகிறது. சயன நரசிம்மருக்கு பிரதிமாதம் சுவாதி அன்று சிறப்பு திருமஞ்சனம் நடைபெறுகிறது. பிரதி பிரதோஷம் அன்று திருமஞ்சனம் செய்து பானக ஆராதனம் செய்து வருகின்றனர்.

**கல்வெட்டுகள் :**

கன்னரத் தேவனின் 16-ஆம் ஆட்சியாண்டில், மேற்கா நாட்டு அதிராஜ மங்கலபுரத்து ஸ்ரீ கோவிந்த விண்ணகர் நின்றருளின பரம சுவாமிகளுக்கு செம்பூர் கோட்டத்துக் காணியுடைய சூரியன் மன்றாடியனாகிய இராஜாதித்தப் பல்லவரையன் என்பவன் இக்கோயிலுக்கு நந்தா விளக்கு ஒன்றினைக் கொடையாக அளித்து அவ்விளக்கு எரிக்க வேண்டிய நெய்க்காக 96 ஆடுகளையும் கொடையாக அளித்துள்ளான். இக்கொடையை மாநகரத்தாரும் விண்ணகரத்தாரும் பெற்றுக் கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது.



முதலாம் இராஜராஜ சோழரின் 30-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1015) ஆவூர் நாட்டு அரிஜெய மங்கலம் என்ற ஊர்ச் சபையினர் இக்கோயிலுக்கு 120 கழஞ்சு பொற் காசுகளைக் கொடையாக அளித்துள்ளனர். இக்காசுகளைக் கொண்டு நிலம் வாங்கப் பெற்று, சாகுபடியில் கிடைக்கும் மொத்த நெல்லில் கோவிந்த விண்ணகர் பரமசுவாமிகளுக்கு திரு அமுது படைக்க ஏற்பாடு செய்துள்ளதாக கூறுகிறது. இப்புதிய கல்வெட்டை பண்ருட்டி கல்வெட்டு ஆய்வாளர் தமிழரசன் என்பவர் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளார்.



மேலும் முதலாம் இராஜேந்திர சோழன், முதலாம் குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன் போன்ற மன்னர்களின் கல்வெட்டுகள் இக்கோயிலில் பெற்ற கொடைகள், நிலங்கள், அதன் அளவுகள், குத்தகைகள், வரிகள், வரிச் சலுகைகள், அளவுகள், ஆகியனபற்றி விரிவாகக் கூறுகின்றன.

**சிறப்புகள்;**

இங்குள்ள பாண்டுரங்கப் பெருமானுக்கு சரடு கட்டி வேண்டிக் கொண்டால் வேண்டிய வரங்களைத் தருகிறார் என்பது இத்தலத்தின் பிரசித்தி பெற்ற ஐதீகமாகும்.

புராணத்தின்படி நாராயண மூர்த்திக்கும் பூதேவிக்கும் திருமணம் நடந்த தலமாகக் கருதப்படுவதால் திருமணமான புது மணத்தம்பதியர்கள் நல்வாழ்வு பெற்றுய்ய வேண்டிக்கொள்வதும் இங்கு சிறப்பான நிகழ்ச்சியாகும்.

**உற்சவங்கள்:**

சித்திரை வருடப்பிறப்பு வைகாசி சுவாதியில் கருடசேவை, ஆடி மாத ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தாயார் ஊஞ்சல் சேவை, 3வது வெள்ளிக் கிழமை வரலட்சுமி விரதம் தாயாருக்கு பூவங்கி சேவை. ஆவணி கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசி முழுவதும் மலையப்பன் சேவை. ஐப்பசி தீபாவளி ஆஸ்தான திருமஞ்சனம். கார்த்திகை திருக்கார்த்திகை உற்சவம் மார்கழி பகல் பத்து இராப்பத்து, வைகுண்ட ஏகாதசி தை ஆற்றுத் திருவிழா தீர்த்தவாரி உற்சவம், ரத சப்தமி மாசி மாசிமகம் பங்குனி உத்திரம் ஆகியனவாகும்.

பிரதி அமாவாசைதோறும் மூலவருக்கு சிறப்பு அலங்காரம் நடைபெறும் ஒவ்வொரு மாதம் வெவ்வேறு அலங்காரத்தில் காட்சியளிப்பார். ஆடி அமாவாசையன்று பூவங்கி சேவை நடைபெறுகிறது.

இங்கே வைகானஸ ஆகம விதிமுறைப்படி பூஜைகள் நடைபெறுகிறது.

**விமானம்:** நளினக விமானம்

**தீர்த்தம்:** கெருட தீர்த்தம்

**அமைவிடம்:**

கடலூர் மாவட்டம் பண்ருட்டிக்கு கிழக்கே 2கி.மீ தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது.

**நடை திறப்பு:** காலை 7.00 மணிதல் 11.00 மணி வரை

மாலை 5.00 மணிதல் 8.30 மணி வரை

திருவதிகை மட்டுமின்றி திவ்ய தேசங்கள் வரை செல்வாக்கு பெற்றுள்ள இந்த அருள்மிகு சரநாராயணப் பெருமாளை நாம் வணங்கி வினைகளை அகற்றிக் கொள்ளலாமே.



மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
திரு கே ஆர். பெரியகருப்பன் அவர்கள்

# இந்து சமய அறநிலையத்துறையில் இரண்டாண்டு சாதனைகள்

தொடங்கப்பட்டுள்ளன.

★ ஆதிதிராவிடர்கள் வாழும் 2,000 குடியிருப்புப் பகுதிகளில் உள்ள திருக்கோயில்கள் புதுப்பிக்கப்படுவதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.






★ தமிழகம் முழுவதும் ரூ.37கோடி செலவில் 2,239 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன.

★ திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்வதற்காக ஆண்டுதோறும் அரசு வழங்கும் மானியத் தொகை ரூ.75 இலட்சத்திலிருந்து, ரூ.3கோடியாக 25.1.2008 அன்று உயர்த்தப்பட்டது.

★ ரூ.157 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில்களில் திருப்பணி உள்பட பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில்கள் சீரமைப்பு**

★ மிகவும் சிதிலமடைந்து, கவனிப்பாரின்றி உள்ள பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க 48 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்துவதற்காக, வரலாற்றுப் பெருமை மிக்க, பழமை வாய்ந்த திருக்கோயில்களை சீரமைக்கும் திட்டத்தின்கீழ், 12ஆவது நிதி ஆணைய நல்கையிலிருந்து ரூ.9.87 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூ.5 கோடி விடுவிக்கப்பட்டு சீரமைக்கும் பணிகள்





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக நியமனம் செய்ய அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி திரு.ஏ.கே.ராஜன் அறிக்கையினை அளித்தார் (23.11.06)

**திருக்கோயில்களில் புதிதாக தங்க ரதம்**

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயில், திருச்சி திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், ஓசூர் அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில். கரூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கோவை அருள்மிகு தண்டு மாரியம்மன் திருக்கோயில், விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் அருள்மிகு கருநெல்லிநாத சுவாமி திருக்கோயில் ஆகிய 8 திருக்கோயில்களில் புதியதாக தங்கரதம் செய்யப்பட்டு, தங்கரத உலா நடத்தப்பட்டுள்ளது.

**தேர்த்திருவிழா**



★ தேர்த்திருவிழா நடைபெறாமல் இருந்த திருக்கோயில்களில் தேரோட்டம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.118.90 லட்சம் மதிப்பீட்டில் எட்டு திருக்கோயில்களில் புதிய தேர் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

★ திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில், 100 ஆண்டுகளுக்கு முன்பாக செய்யப்பட்டு பழுதடைந்திருந்த அம்பாள் தேருக்குப் பதிலாக ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திருத்தேர் செய்யப்பட்டு 4.5.2008 அன்று தேரோட்டம் நடத்தப்பட்டது.

★ ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் சார்பில் புதிய நவீன திருமண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 13.4.2007 அன்று திறக்கப்பட்டது.

★ சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் கோவிலில் ரூ. 7.6 கோடி செலவில் அருள்மிகு மாரியம்மன் மூலவர் விமானம் தங்கவிமானமாக அமைக்கப்பட்டது.

★ தேவார திருமுறைகளிலும் திவ்விய பிரபந்தங்களிலும் பாடிப்பரவப்பட்ட, ஆனால் நீண்டகாலமாக குடமுழுக்கே கண்டிராத 30 புராதன திருக்கோயில்களை ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**சாதி வேறுபாடின்றி அர்ச்சகர் பயிற்சி**

★ தகுதியும் திறமையும் பெற்ற அனைத்து இந்துக்களும் சாதிவேறுபாடின்றி திருக்கோயில்களில் அர்ச்சகராக நியமிக்கப்படலாம் என்று 2.1.2007 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

★ பழனி, திருச்செந்தூர், மதுரை திருவண்ணாமலை ஆகிய நான்கு இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும், சென்னை, திருவரங்கம் ஆகிய இரண்டு இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இவற்றில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 34 பேர், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த 76 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 55 பேர் உட்பட மொத்தம் 207 பேர் இலவசமாக பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, உறைவிடம் ஆகியன இலவசமாக அளிக்கப்படுவதோடு மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 ஊக்கத் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

**கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்**

★ கிராமக் கோயில் பூசாரிகள் நலனுக்கென ஒரு நலவாரியம் 23.1.2007 அன்று அமைக்கப்பட்டது. இதுவரை 15,377 பூசாரிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு இவ்வாரியத்தின் மூலம் நலத்திட்டங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ தமிழ் தேவார திருமுறைகளையும், பிரபந்தங்களையும் பண்ணோடு ஓதுவதற்கு, முறையாகப் பயின்ற ஓதுவார்களை உருவாக்குவதற்காக ஓதுவார் பயிற்சி நிலையம் ஒன்று பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் தொடங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

**தமிழில் அர்ச்சனை**

★ தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்பதை மாற்றி தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று அறிவித்து தமிழ் அர்ச்சனை ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. தமிழில் அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

★ நீண்டகாலத்திற்குப் பின்பு, சிதம்பரம் தில்லை நடராஜர் கோயிலில் திருச்சிற்றம்பல மேடையில் தமிழ் தேவார திருமுறைகள் ஓதுவதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டினை உறுதி செய்யும் வகையில், திருக்கோயில்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த, முக்கிய பிரமுகர்களுக்கு பரிவட்ட மரியாதை செய்யும் வழக்கம் நிறுத்தப்பட்டது.

★ திருக்கோயில்களை நிருவகிக்க ஏற்படுத்தப்படும் அறங்காவலர் குழுவில் மகளிர் ஒருவரை அறங்காவலராக நியமிப்பது சட்டமாக்கப்பட்டுள்ளது.

**புதிய கோசாலைகள்**

★ திருக்கோயில்களுக்கு, காணிக்கையாக வழங்கப்படும் பசுக்கள் மற்றும் இதர கால்நடைகள் ஏலம் விடப்படுவது நிறுத்தப்பட்டு, அவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு, ஒருங்கிணைந்த கோசாலைகள் அமைக்க

ஆணையிடப்பட்டுள்ளது. இதன் பயனாக, முதல்கட்டமாக, திருச்சி, கம்பரசம்பேட்டை மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் கோசாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகத்தை செம்மைப்படுத்தவும், மாவட்டந்தோறும் மக்கட்பணி செய்ய ஓர் அலுவலகம் என்ற நிலையை உருவாக்கிடவும், கரூர், திண்டுக்கல், திருவாரூர், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஐந்து வருவாய் மாவட்டங்களில் இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அலுவலகம் புதிதாக ஏற்படுத்தப்பட ஆணையிடப்பட்டு, அவை 15.4.2008 முதல் செயல்படத் தொடங்கியுள்ளன.

★ தஞ்சாவூரில் இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் அலுவலகம், உதவி ஆணையர் அலுவலகம், பொறியியல் பிரிவு மற்றும் தணிக்கை அலுவலகம் ஆகியவை ஒரே இடத்தில் இயங்கும் வகையில், ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் ரூ.70.83 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டு, 27.9.2007 அன்று திறக்கப்பட்டது.

**திருக்கோயில் இடங்களில் குடியிருப்போருக்கு, வணிகம் செய்வோருக்கு வாடகை நிர்ணயம்.**

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் மனைகளில் குடியிருப்பவர் களுக்கான வாடகை விகிதம் பாதியாகக் குறைத்து வாடகை நிர்ணயம் சீரமைக்கப்பட்டது.

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம், மனை ஆகியவற்றில் குடியிருப்போர், வணிகம் செய்வோர் ஆகிய அனைத்துத் தரப்பினரும் செலுத்த வேண்டிய 3 ஆண்டுகளுக்கு ஒரு முறையான வாடகை உயர்வை 33.3 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாகக் குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் நீண்டகாலமாக கூட்டாக ஆக்கிரமித்து குடியிருப்போர்களை, திருக்கோயிலுக்கு நன்மை பயக்கும் வகையில் வாடகைதாரர்களாக அங்கீகரிக்க முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் இவர்களுக்கு மின்சாரம், குடிநீர், சாலைப் போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



**பணியாளர் நலன்**

★ சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள நிலங்களின் விலை உயர்வை கருத்தில் கொண்டு திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடங்களைப் பாதுகாக்கும் நோக்கோடும், திருக்கோயில் வருவாயைப் பெருக்கிடவும், ஒரு தற்காலிக ஏற்பாடாக, திருக்கோயில்களுக்குச் சொந்தமான ஏழு இடங்களில், தனியார் வாகனப் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


★ ஒருகால பூஜை திட்டத்தின் கீழ் மேலும் 500 திருக்கோயில்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

★ திருக்கோயில் பணியாளர்களுக்கு சம்பளத்துடன் 50% அகவிலைப்படி சேர்க்கப்பட்டது.

★ திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு முதல் கட்டமாக 109 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. திருக்கோயில் பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து பயனடைய, ஓய்வூதிய மையநிதிக்கு ரூ.20,000 செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கம் செய்து ஆணையிடப்பட்டது.

★ போதிய பாதுகாப்பு வசதியற்ற திருக்கோயில்களின் உலோகத் திருமேனிகளைப் பாதுகாத்திட கும்பகோணம், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர் கோயம்புத்தூர், புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன.

# ஆனைமேல் சென்ற அழகிய சுந்தரன்



**சிவ**பெருமானின் அழகிய வடிவின் நிழலில் இருந்து தோன்றியவர் சுந்தரர். சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராகப் பணிபுரிந்து வருபவர். ஒரு சமயம் பூப்பறிக்கச் செல்கையில் நந்தவனத்திற்கு வந்திருந்த அம்பிகையின் தோழியரான கமலினி, அநிந்திதை என்பவர்களை ஆசையுடன் நோக்கினர். அவர்களும் காதலுடன் நோக்கினர்.

இதையறிந்த சிவபெருமான் மூவரையும் மண்ணுலகம் சென்று பிறக்கும்படி ஆணையிட்டார். சுந்தரர் திருநாவலூரில் பிறந்து வளர்ந்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். பின்னர் தலங்கள்தோறும் சென்று பதிகங்கள் பாடிப் பரவினார். பல அற்புதங்களை நிகழ்த்தினார். திருவாரூர் சென்று தங்கினார். அங்குப் பரவையார் என்ற பெயரில் பிறந்து வளர்ந்து கோயிற்பணிகளைச் செய்து வந்த கமலினியாரை மணந்து இல்லறம் நடத்தினார். தல யாத்திரையாகச் சென்ற போது ஒற்றியூரில் சங்கிலி நாச்சியார் என்ற பெயரில் தோன்றி வளர்ந்து பூப்பணி செய்திருந்த அநிந்திதையை மணந்து சிலகாலம் அங்கிருந்தார்.

பல தலங்களில் இறைவன் அவருக்குப் பொன்னும் மணியும், உணவும் அளித்தான். அச்செயலால் அவன் பொன்னிட்ட நாதன் விருந்தீட்டீசன் என்ற பெயர்களையும் பெற்றான்.

இறுதியில் சுந்தரர் சேர நாட்டில் உள்ள கொடுங்கோளூர் சென்றார். அங்கு அரசாண்டு வந்த கழற்றறிவாரான சேரமான் பெருமாள் நாயனாருடன் தங்கியிருந்தார். அருகிலுள்ள திரு அஞ்சைக்களம் சென்று அங்கு வீற்றிருக்கும் பெருமானைப் பாடிப் பரவி நின்றார். அவர் உள்ளத்தில் மீண்டும் கயிலைக்குத் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அக்குறிப்பை வைத்து ''தலைக்குத் தலை மாலை'' என்ற பதிகத்தைப் பாடினார்.

இறைவன் அவருடைய மன ஓட்டத்தை அறிந்தான். பரிசனங்களிடம் ''வெள்ளானை மீது ஏற்றிச் சுந்தரனை இங்கே அழைத்து வாருங்கள்'' என்றார் அதன்படியே முனிவர்களும் தேவர்களும் வெள்ளானையுடன் அவர் இருந்த அஞ்சைக் களத்திற்கு வந்தனர். சுந்தரரிடம் பெருமானின் அழைப்பைக் கூறினர்.

சுந்தரர் அந்த யானையை வலம் வந்து அதன் மீது ஏறி அமர்ந்தார். அவ்வேளையில் தான் **''எனை முன் படைத்தான்''** என்ற பதிகத்தை ஓதினார். அப்பதிகத்தில் பெருமான் தனக்கு ஆனையை அளித்து வருக என அழைத்ததைத் திரும்பத் திரும்பக் கூறுவதைக் காண்கிறோம்.

இப்பாடலில் ஆயிரம் கரங்களை உடையவனும் தினமும் ஓராயிரம் சிவலிங்கங்களை வைத்துப் பூசிப்பவனுமான வாணன் என்பான் அங்கு கூட்டத்தை விலக்கி வழி ஏற்படுத்தி தன்னை ஆனைமீது ஏற்றினான் என்று கூறுகின்றார். சுந்தரர் வெள்ளானை ஏறி திருக்கயிலை சென்றதைச் சேரமன்னர் அறிந்தார்.தனது குதிரையை அழைத்து அதன் மீதேறி அதன் காதில் திருவைந்தெழுத்தை ஓதினார். அப்புரவி விண்ணில் பாய்ந்து பறந்தது. சேரர் சுந்தரர் செல்லும் யானையைத் தொடர்ந்து சென்றார். யானை மீது செல்லும் சுந்தரைக் கண்டு தொழுதார். அவரை வலம் வந்து அவருக்கு முன்பாகக் கயிலை சென்றார்.'

இருவரும் கயிலை மலையானை வணங்கி அங்கே நிலைபெற்றனர். சுந்தரர் யானை மீதும். அவருக்கு முன்பாக குதிரை மீது சேரமான் பெருமானும் திருக் கயிலைக்குச் செல்லும் காட்சி அன்பர்களின் மனதில் நீங்காத ஓவியமாகத் திகழ்கின்றது, அக்காட்சியைச் சிற்பமாகவும் ஓவியமாகவும் அநேக இடங்களில் அமைத்தனர்.

தஞ்சைப் பெரிய கோவிலில் இராஜராஜ சோழன் காலத்தில் வரைந்த பெரிய வண்ண ஓவியம் இக்காட்சியைச் சித்தரிக்கின்றது, இந்த ஓவியத்தை அடியொற்றி வரையப்பட்ட ஓவியத்தையே இங்கே காண்கிறோம்.

இதில் இருவரும் கடல்மீது பயணிப்பது போல் காட்டப்பட்டுள்ளது. அக்கடலில் அலைகளும் மீன்களும் உள்ளன,

திரு அஞ்சைக்களம் கடலோர ஊராகும். சுந்தரர் ஆனைமீது சென்ற போது கடலரசன் வந்து வழிபட்டான். அவனிடம் தான் இறைவன் ஆணைப்படி கயிலை செல்வதைஅஞ்சனக் களத்தார்க்கும் மக்களுக்கும் அறிவிக்கும்படிக் கூறினான். அவன் மலர் கொண்டு வந்து வழிபட்டதை, **''நிலைகெட விண்அதிர நிலமெங்கும் அதிர்ந்தசைய மலைகளுக்கிடையே யானையேறி வரும் என் எதிரே அலைகடல் அரையன் மலர் கொண்டு வந்து முன் இறைஞ்சி வழிபட்டான்''** என்றார் அதையொட்டியே கீழே கடல் காட்டப் பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

அவர் சென்ற போது ஆகமம் கூறும் வாழ்த்தொலிகளும் தோத்திரங்கள் விரவி வேத முழக்கமும் விண்ணை அளாவியதாம்.


"கொங்கு நாடு சுந்தரரோடு தொடர் புடையதாகும். கொங்கு நாட்டுத் திருமுருகன் பூண்டி, அவிநாசி, திருவெஞ்சமாக்கூடல் ஆகியவை சுந்தரர் பாடிய திருத்தலங்களாகும். கொங்குநாட்டின் வழியாக அவர் மும்முறை பயணம் செய்துள்ளார். எனவே, கொங்குநாட்டில் சுந்தரரைப் போற்றி வழிபடும் வழக்கம் மிகுதியாக உள்ளது.

" கொங்குநாட்டில் அமைந்துள்ளஅநேக ஆலயங்களில் சிறிய புடைப்புச் சிற்பமாக இக்காட்சி அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

" பெரியபுராணத்தில் முதல் பகுதியும் இறுதிப்பகுதியில் இக்காட்சியோடு தொடர்பு கொண்டதேயாகும்.

**சுந்தரர்குருபூசைவிழா 08.08.2008**

# கொப்புடைய நாயகி




தென்தமிழ் நாட்டில் சீர்மை பெற்ற பாண்டிய மண்டலத்தில் சிறப்புடன் விளங்குவது சிவகங்கைச் சீமையாகும். சிவகங்கை மாவட்டத்தில் செல்வம் கொழிக்கும் நகராகக் காரைக்குடி விளங்கிவருகிறது.

இப்பாண்டிய மண்டலத்தில் கண்ணாத்தாள், கண்ணியம்மன், காட்டேரி, கொப்பாத்தாள் முதலிய அநேக பெண் தெய்வங்கள் அருளாட்சி புரிந்து வருகின்றனர், இவ்வகையில் காரைக்குடி நகரில் கொப்புடைய அம்மன் அருளாட்சி புரிந்து வருகின்றாள். முன்னாளில் காரை வனத்தின் நடுவே இந்த அம்பிகை தோன்றியதாகவும், அந்தக் காரைக்காட்டை அழித்துக் கோயிலை அமைத்துடன் அதைச் சுற்றி அழகிய நகரை உண்டாக்கியதாகவும் வரலாறு கூறுகிறது, காரை வனத்தில் உண்டான பெரிய குடியிருப்பாதலின், இந்நகரம் காரைக்குடி என்று வழங்கப்படுகிறது, காரைக்குடிக்குரிய பெரிய கிராம தேவதையாகக் கொப்புடை நாயகி விளங்கி வருகிறாள்.

இப்பகுதியில் கோனாப்பட்டு, பில்ல மங்கலம் முதலிய ஊர்களில் அவள் இதேபெயரில் எழுந்தருளியிருந்தாலும், காரைக்குடியிலுள்ள சந்நிதியே முதன்மை யானதும் சிறப்பு வாய்ந்ததுமாகத் திகழ்கிறது. இக்கோயிலுக்கான தனி வரலாறோ தல வரலாறோ ஏதும் கிடைக்கவில்லை. என்றாலும் இப்பகுதியில் வழங்கி வரும் செவிவரலாற்றுச் செய்திகள் மூலம் சில செய்திகளை அறிய முடிகிறது.

காரைக்குடியிலிருந்து தென்மேற்குத் திசையில் 4கி.மீ தொலைவிலுள்ள சங்கரா புரத்தின் காட்டுப்பகுதியில் காட்டம்மன் கோயில் என்ற கோயில் உள்ளது, இக்கோயில் சிவகங்கை மன்னர்களால் கட்டப்பட்டதாகும். இந்த காட்டம்மனின் தங்கையே கொப்புடைய அம்மன் என்று கூறுகின்றனர்.

காட்டம்மனுக்கு ஏழு பிள்ளைகள். கொப்புடைய நாயகிக்குப் பிள்ளைகள் இல்லை. கொப்புடையம்மன் அடிக்கடி காட்டம்மனையும், அவளது குழந்தைகளையும் பார்க்க கொழுக்கட்டை பணியாரங்களுடன் வருவது வழக்கம். ஆனால் காட்டம்மன் மலடியான தன் தங்கை தமது பிள்ளைகளைப் பார்ப்பதைவிரும்பவில்லை. அதனால் அவள் வரும்போதெல்லாம் அந்தப் பிள்ளைகளை ஒளித்து வைத்துவிடுவாள். இதனால் கோபங்கொண்ட கொப்புடையாள் காரைக்குடிக்கு வந்துவிட்டாள் என்றும் அதன் பிறகு அங்குச் செல்லவில்லை என்றும் கூறுகின்றனர்.

காரைக்குடியைச் சுற்றியுள்ள கிராமங்களில் எழுந்தருளியிருக்கும் கிராம தேவதைகளைக் கொப்புடையாளின் சகோதரிகளாகக் கூறும் வழக்கம் உள்ளது. பள்ளத்தூர், பில்ல மங்கலம், கோனாப்பட்டு, முதலிய ஊர்களில் உள்ள தெய்வங்களை இவளுக்கு அக்காவாகக் கூறுகின்றனர். காரைக்குடியைச் சுற்றியுள்ள ஆறு கிராமங்களிலுள்ள அம்பிகைகளையும் சேர்த்து ஏழுகன்னியராகக் கூறும் வழக்கமும் உள்ளது.

இவ்வாறு ஏழு பெண் தெய்வங்களை வழிபடும் வழக்கம் உள்ளதை ஆங்காங்குக் காண்கிறோம், வேறொரு செய்தியில் கொப்புடையாள் காட்டம்மனின் உற்சவத் திருமேனி என்றும், நாள்தோறும் சென்று காட்டம்மனை வழிபட முடியாத நிலை

ஏற்பட்டபோது, இப்பகுதியை ஆண்டுவந்த அரசன் 'அவளுடைய விக்கிரகத்தை இங்கு எடுத்து வந்ததுடன், கோயில் கட்டி அதில் எழுந்தருள வைத்தான் என்றும் கூறுவர். அவன் தான் செய்து வந்த அன்றாட வரவு செலவுகளை இவள் முன்பு படிப்பது வழக்கம் என்றும் கூறுகின்றனர்.

வேறொரு செய்தியில் முகலாய மன்னர்கள் பெரும்படை நடத்தி, ஊர்களைச் சூறையாடி, அங்கிருந்த கடவுள் திருவுருவங்களை அழித்து வந்தார்கள் என்றும். அவர்களிடமிருந்து காக்க மக்கள் கொப்புடையம்மன் திருவுருவத்தைப் பெரிய வேப்பமரப்பொந்தில் வைத்து விட்டார்கள் என்றும், இப்படி ஒப்படையாகச் செய்யப் பெற்ற திருவுருவமாதலின் ஒப்புடையாள் என்று வழங்கப்பட்டு, காலப்போக்கில் மருவிக் கொப்புடையாள் ஆனதென்றும கூறுவர்.

இப்படி மரப்பொந்தில் வைக்கப்பட்ட அம்பிகையைக் காலப்போக்கில் மக்கள் மறந்துவிட்டனர் என்றும், இப்பகுதியில் மாடு மேய்க்கும் இடையர் குல மக்கள் மரப்பொந்திலிருந்த அதை வெளியே எடுத்துக் கொடுத்தனர் என்றும் கூறப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்பட்ட திருவுருவத்தைச் சங்கராபுரத்தில் மகிழ மரத்தடியில் வைத்து வழிபட்டு வந்தனர் என்றும் பின்னாளில் காரைக்குடி நகர் தோன்றி விரிவடைந்தபிறகு இப்போதுள்ள இடத்தில் கொண்டுவந்து வைத்தனர் என்றும் கூறப்படுகிறது.

இப்படிக் கூறப்படும் கொப்புடை நாயகி பற்றிய வரலாறுகள் யாவும் உறுதிப் படுத்தப்பட்ட சான்றுகளோடு இல்லை. கொப்புடையம்மனைப் பேச்சுவழக்கில் கொப்புடையாள். கொப்பாத்தாள், கொப்புடைப் பிடாரி என்று அழைத்து வருகின்றனர். அன்னை கொப்பு என்னும் அணியை அணிந்திருக்கிற காரணத்தால் இப்பெயர் பெற்றாள் என்பர்.

காரைக்குடியின் நடுவில் கிழக்கு நோக்கியவாறு இக்கோயில் அமைந்துள்ளது. பெரும்பான்மையாக கிராம தேவதைக் கோயிலை வடக்கு நோக்கியே அமைப்பது வழக்கம் என்றாலும், இங்கே கிழக்கு நோக்கி அமைத்துள்ளனர்.

தலைவாயிலின் மீது மூன்று நிலை இராஜகோபுரம் அழகுடன் திகழ்கிறது. இதன் வழியாக உட்சென்றதும், சோபன மண்டபத்தைக் காண்கிறோம். இம்மண்டபத்தின் இடப்புறத்தில் கருப்பர் சந்நிதியும் உள்ளன. கருப்பர் தாவும் குதிரை மீதமர்ந்த கோலத்துடன் ஒரு கையில் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு மறு கையில் நீண்ட வாளை ஏந்தி சிலா விக்கிரமாகக் காட்சியளிக்கிறார். இவருக்கு வல்லத்துக் கருப்பன் என்ற பெயரும் உண்டு. இவருக்குச் சந்தனக்காப்பு செய்து மக்கள் தத்தம் பிரார்த்தனைகளை நிறைவேற்றுகின்றனர். இதையடுத்துள்ள இரண்டாவது வாயிலைத் தாண்டி வலம் வரலாம். பிராகாரத்தில் கன்னிமூல கணபதி. விசுவநாதர், விசாலாட்சி, தட்சிணாமூர்த்தி, சண்டிகேசுவரர் முதலானோர் சந்நிதிகள் உள்ளன. வள்ளி தெய்வ யானை யுடன் கூடிய சுப்பிரமணியர் வயிரவர் சந்நிதிகளும் அமைந்துள்ளன.

கருவறையில் கிழக்கு நோக்கியவாறு கொப்புடை நாயகி நின்றகோலத்தில் காட்சியளிக்கிறாள். தலை மீது சுடர்முடி தீச்சுவாலைகளுடன் உள்ளது. வலது முன்கை அபயமளிக்க இடது முன்கை கபாலத்தைத் தாங்கியுள்ளது. மேல் திருக்கரங்களில் சூலமும், பாசமும் உள்ளன. ஏனைய தலங்களில் அமைந்திருப்பது போல் கல்திருமேனியாக இல்லாமல் உலோகத் திருமேனியே இங்கு மூல விக்கிரகமாக விளங்கி வருகிறது, கருவறையில் அன்னை எழுந்தருளியுள்ள பீடத்தில் ஸ்ரீ சக்கரம் அமைந்துள்ளதாகக் கூறுகின்றனர். சுமார் ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே இக்கோயில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. நாட்டார்களும் நகரத்தார்களும் மெய்யன்பர்களும் இங்கு அநேக திருப்பணிகளைச் செய்துள்ளனர்.

இக்கோயிலில் வெள்ளியிலான சிம்ம வாகனம், இடபவாகனம், ரதம் ஆகியன உள்ளன. மரத்தால் செய்து வண்ணந்தீட்டப்பட்ட காமதேனு, கயிலாசவாகனம், அன்னம் குதிரை ஆகிய வாகனங்களும் உள்ளன. வெள்ளியாலான குதிரைவாகனம் ஒன்றும் உள்ளது.

கோயிலுக்குத் தென்புறம் பெரியகுளம் உள்ளது. ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்பாக, மோர் விற்றுவந்த ஓர் இடையர்குலப் பெண்மணி இக்குளத்தை வெட்டினாள் என்று கூறப்படுகிறது. இதற்குக் கல்லுக்கட்டி ஊரணி என்பது பெயர்.

1989ல் குடமுழுக்கு செய்யப்பட்டது. அந்நாளில் திரு. தாக்கூர்பாய் சேட் என்பவர் வெளிவாயில் மண்டபத்தைக் கட்டிக் கொடுத்ததுடன் அன்னை எழுந்தருளியுள்ள ஸ்ரீசக்கர பீடத்திற்கு வெள்ளிக்கவசம் அணிவித்துள்ளார்.

இப்போது கருவறையைக் கல்திருப்பணி செய்து விரிவான திருப்பணிகள் செய்யப்பட்டு

23.4.2008 ஆம் நாளில் குடமுழுக்குப் பெருவிழா தனிச்சிறப்புடன் நடைபெற்றுள்ளது. இக்கோயிலில் நான்கு கால பூசைநடைபெறுகிறது.

காலைச்சந்தி 7.30 மணிக்கும், உச்சிக்காலம் 12 மணிக்கும், சாயுங்காலம் 5 மணிக்கும், அர்த்தசாமம் 8 மணிக்கும்

நடைபெறுகிறது அனைத்துச் செவ்வாய் கிழமைகளிலும் இரவு 8.30 மணிக்கும் வெள்ளிக்கிழமைகளில் 9 மணிக்கும் அர்த்த சாம பூசைசெய்யப்பட்டு நடைசார்த்தப்படும். சாயுங்கால பூசையில் தினமும் சோடசோபார பூசைநடைபெறுகிறது.

இத்தலத்தில் சித்திரைச் செவ்வாய் எனும் பெயருடன் பெருவிழா 10 நாட்கள் கொண்டாடப்படுகின்றன. சித்திரை மாதத்துக் கடைசி செவ்வாய் அன்று தொடங்கி வைகாசி முதல்வாரம் வரைநடைபெறுவதாகும்.

இத்திருவிழா பெரியவர் கோயிலில் தண்ணீர் வைத்தல் என்பதில் இருந்து தொடங்குகிறது. முதல் நாள் மண் எடுத்து வந்து முளையிட்டு விழாவைத் தொடங்குகின்றனர்.

எட்டாம் நாள் தேரோட்டம் நிகழ்கிறது. எட்டாம் நாள் காலையில் அம்பிகை தேரில் புவனிவருவாள். பிற்பகலில் தேர் புறப்படும் அது பெரிய கண்மாயைத் தாண்டி மாலையில் காட்டம்மன் கோயிலை அடையும். அன்றிரவு அங்கே தேரில் இருந்து இறக்கி அபிஷேகம் அலங்காரம் செய்கின்றனர். அங்கு ஊஞ்சல் விழா கொண்டாடப்படுகிறது. ஒன்பதாவது நாள் காட்டம்மன் கோயிலில் இருந்து மீண்டும் தேரேறி காரைக்குடிக்கு வந்து ரதவீதிகளில் பவனிவந்து திருநிலை சேர்வாள். பத்தாம் நாள் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது. பிறகு பூப்பல்லக்கில் அம்பிகை பவனி வருகிறாள்.

இவ்விழாவில் 2ஆம் நாள் முதல் 9ஆம் நாள் முடிய காலையில் அம்மன் பக்தியுலாவும் அந்த நிகழ்ச்சியில் திருமுறை இசை, வேத பாராயணம், நாதஸ்வர இசைஆகியனவும் நடைபெறும். சித்திரை செவ்வாயில் பூச்சொரிதல் நடைபெறும். புரட்டாசியில் நவராத்திரி விழாவும் நடைபெறுகின்றன. அந்நாளில் கோவிலூர், நெல்லை, சுந்தரேசுவரர் பெருமாள் கொப்புடையம்மன் ஆகியோர் மகர நோம்புத் திடலில் கூடுவர். அம்பு போட்டதற்குப் பின்னர் ஏக காலத்தில் இவர்களுக்குத் தீபாராதனை நடந்து அவரவர் கோயிலுக்கு திரும்புகின்றனர்.

மார்கழியில் அதிகாலை துயில் எழுப்புதல். பாவைப்பாடல் விழாவும் பங்குனியில் தாரா அபிஷேகமும் நடைபெறுகின்றன. தேர்த் திருவிழாவின் போது கரும்பில் தொட்டில் கட்டுதல் பட்டு சார்த்துதல், மாவிளக்கு போடுதல், குதிரை வாகன மேற்றல் முதலான பிரார்த்தனைகளை அன்பர்கள் நிறை வேற்றுகின்றனர்.

இந்த அம்பிகையின் பேரில் கவிஞர் சொ.தெய்வராயன் அவர்கள் 1)காரைக்குடி கொப்புடையம்மன் பிள்ளைத்தமிழ் 2) காரைக் குடி கொப்புடையம்மன் திருப்பள்ளியெழுச்சி 3) காரைக்குடி கொப்புடையம்மன் இரட்டைமணி மாலை 4)வர்க்க மாலை 5)நாட்டியம்மன் பதிகம் 6) நவரத்தினமாலை ஆகியவற்றைப் பாடியுள்ளார்.

இத்தலத்தில் தினமும் தமிழில் அர்ச்சனை செய்யப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயில் ஒரு பிரார்த்தனைத் தலமாகும். பக்தர்கள் வேண்டுதலை வேண்டுதலுக்கேற்ப அவர்களது குறைகளை நீக்கி வேண்டும் வரம் தரும் சிறப்புடையவள் அன்னை கொப்புடையாள்

இத்தலத்தில் ஞாயிறு, செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் இராகு காலத்தில் பூசை செய்து வேண்டுதல் செய்து கொண்டால் நினைத்த பலன் பெறுதல் கூடும்.


**திருக்கோயில்**
**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# உயிர்க் கருணை

- திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

ஒரு வீடு இன்றி நாம் வாழ முடியாது. அந்த வீடும் விசாலமானதாய், நல்ல தண்ணீர் வசதியும் சுற்றி நந்தவனமும் பழமரங்களும் காற்றோட்டமும் உடையதாய் இருந்தால் மிகுந்த நன்மையாக இருக்கும். இத்தகைய வசதியுள்ள வீட்டைக் கெட்டியான பூட்டை அமைத்துப் பூட்டியிருக்கின்றார்கள். அப்பொழுது அதனைத் திறந்து அதில் மகிழ்ச்சியாகக் குடியிருக்க வேண்டுமானால் திறவுகோல் வேண்டுமல்லவா?

மோட்ச வீடு என்றால் அது எத்துணையருமையுடையது? அங்கே எல்லா வசதிகளும் உண்டல்லவா? அந்த மோட்ச வீட்டை விரும்பாத ஆன்மாக்கள் இருக்க முடியாதுதானே. அந்த முத்தி வீட்டிற்கு ஒரு திறவுகோல் வேண்டாமா? அதனை நாம் பெற்றுக்கொண்டால்தானே இந்த உடம்பை விட்டு அங்குப் போகும்போது திறவுகோலையிட்டுப் பூட்டைத் திறந்து அந்த முத்தி வீட்டிலே சித்தியுடன் வாழலாம். அதற்குத் திறவுகோல் எது?

உயிர்கள் மீது வைக்கின்ற கருணையாகிய ஜீவகாருண்யந்தான் முத்திவுலகிற்குத் திறவுகோல்,

ஆதலால், மன்னுயிர்களைத் தன்னுயிரைப்போல் பார்க்க வேணும். எல்லா உயிர்களும் ஈசன் கோயில். ஆகவே, எந்த உயிர்களையும் கொல்லக்கூடாது.

ஆனை அடியில் அடங்காத அடி கிடையாது. அதுபோல, கொல்லாமையென்ற அறத்தில் அடங்காத அறமும் கிடையாது.

**"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று."**

என்கின்றார் திருவள்ளுவர்.

ஒவ்வொருவரும் பிறவுயிரைக் கொன்று அருந்தும் கொடிய பழக்கத்தைத் தவிர்த்துவிட வேண்டும். அவ்வாறு, கொல்லாவிரதத்தை மேற்கொள்வாராயின் அவர்கள் வேறு தவம் புரிய வேண்டாம். தானம் புரியவேண்டாம். தருமம் புரிய வேண்டாம். ஆண்டவன் அருள் தானே வரும்.


அதனால்தான் தாயுமானார்.

**"கொல்லா விரதம் குவலயம் எல்லாம்ஓங்க**

**எல்லார்க்கும் சொல்லுவதுஎன் இச்சை பராபரமே"**

என்கின்றார்.

நமது உடம்பில் ஒரு முள் குத்தினால் எத்துணை வேதனை உண்டாகின்றது. சவுளம் புரிந்துகொள்ளும்போது சிறிது கத்தியினால் சிறுதோல் சிதைந்தால் எத்துணைத் துன்பம் உண்டாகின்றது. நன்கு கவனியுங்கள். கத்தியை வைத்து ஆடு, கோழிகளை அறுக்கும்போது அந்த வாயில்லாத உயிர்கள் துள்ளித் துடிக்குமல்லவா? அப்படி அவைகளைக் கொன்று தின்றால் பதினாராயிரம் ஆண்டு வாழ முடியுமா?



மனித வாழ்க்கைக்கு மரக்கறி உணவு பொருந்தியது. போதிய வலிமை அந்த மரக்கறி உணவிலே கிடைக்கின்றது. புலால் உணவினால் நிரம்ப வலிமை யுண்டாகின்றது என்ற எண்ணுகின்ற எண்ணம் பிழையானது.

புல் தின்கின்ற ஆட்டுக்கும், வைக்கோல் உண்ணுகின்ற மாட்டுக்கும், தழை தின்கின்ற யானைக்கும் வலிமையில்லையா? யானை சைவ ஆகாரம் அருந்துகின்றது. அதற்குள்ள வலிமையை அளக்க முடியுமா?

சைவ உணவு உண்கின்ற ஆடு, மாடு, யானை, மான் முதலியவைகள் சாதுவாகவும் கூட்டம் கூட்டமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்கின்றன.

புலால் உண்ணுகின்ற நாய், நரி, புலி, சிங்கம் முதலிய உயிர்கள் கொடியவைகளாகவும் ஒற்றுமையின்றியும் இருக்கின்றன. மாட்டுமந்தை ஆட்டுமந்தை முதலியவைகளைக் காண்கின்றோம். புலிமந்தை நாய்மந்தை என்று ஒன்றைப் பார்க்கின்றோமா? இரு நாய்கள் ஒன்று கூடமாட்டா. ஏன் உணவினால் வரும் கொடுமை.

இந்த உடம்பை வளர்ப்பதற்கு இன்னோர் உடம்பை வெட்டியுண்பது கொடுமையிலும் கொடுமை. அவர்கள் கருணை எங்ஙனம் பெறுவர்? என்கின்றார் வள்ளுவர்.

**தன்னூன் பெருக்கற்கு தான்பிறிது ஊன்உண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்?**

புல் தின்கின்ற மாடு ஆடுகளுக்குப் பற்கள் தட்டையாக இருக்கின்றன. புலால் உண்ணுகின்ற உயிர்களாகிய புலி, கரடி, சிங்கம், நாய், நரி முதலிய உயிர்கட்குப் பற்கள் கூர்மையாக இருக்கின்றன. மனிதனுடைய பற்களும் மரக்கறி உண்பதற்கு ஏற்றதாகவே தட்டையாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குறிப்பினால் மனித வாழ்க்கைக்குப் புலால் உணவு ஏற்றதன்று.

இனி அதனை உண்கின்றவர்களே அந்நிய பதார்த்தம் என்கின்றார்கள். அது, சொந்தப் பதார்த்தம் அன்று. அதனைச் சமைக்கும் ஏனங்கள், அரிவாள்மனை, கரண்டி இரும்புச் சட்டி எல்லாம் வேறாக வைத்திருப்பார்கள். கார்த்திகை, அமாவாசை முதலிய நல்ல நாள்களில் சமைக்கும் ஏனங்கள் வேறு. வாயும் வயிறும் ஒன்றுதானே. அமாவாசை கார்த்திகைக்கு ஒரு வயிறு! அன்னியப் பதார்த்தத்திற்கு ஒரு வயிறு என்றா உளது? வாயும் வயிறும் ஒன்று. ஏனங்கள் மட்டும் வேறு வேறு என்றால் அது பொருந்துமா?

**ஆருயிர் கொல்லார் மேலோர் அறிவினை யறிந்த நல்லோர்**
**தீமனம் அடக்க வல்லார் இவர்களே தேவ ராவார்**
**காமராய்க் கற்ப ழித்தோர் களவுசெய் துடல்வ ளர்த்தோர்**
**மாமிசந் தின்போ ரெல்லாம் மானிடப் புலையர் தாமே.**

என்பது வள்ளலார் சாத்திரம்.

கொல்லாமையை மேற்கொண்டார்க்குத் தெய்வத் திருவருள் என்றும் நின்று துணை புரியும். அவர்கட்கு எல்லா நலன்களும் உண்டாகும். அவர்களைப் புண்ணியவுலகில் அமரர்கள் வரவேற்று உபசரிப்பார்கள்.

**"கொல்லா விரதியர்நேர் நின்ற முக்கட் குருமணியே"**

என்கின்றார் தாயுமானார்.

பிறவுயிரைக் கொன்று தின்போர் கங்கை முதலிய நதிகளில் முழுகினாலும், கடவுளைப் பூசித்தாலும், மேகம்போல் நிரம்ப அள்ளிக் கொடுத்தாலும், பலப்பல ஞான சாத்திரங்களைப் படித்தாலும் நரகஞ்சேர்ந்து நலிவுறுவர்.

**கங்கையில் படிந்திட் டாலும் கடவுளைப் பூசித் தாலும்**
**மங்குல்போல் கோடி தானம் வள்ளலாய் வழங்கிட் டாலும்**
**சங்கையில் லாத ஞான சாத்திரம் உணர்ந்திட் டாலும்**
**பொங்குறு புலால்பு சிப்போன் போய்நர கடைவன் அன்றே**

-வள்ளலார்

**"நோன்பெனப் படுவது கொன்றுதின் னாமை"**

-ஔவையார்

**கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் குத்திரங் கோள்களவு**

கல்லாமல் கைதவ ரோடிணங் காமல்
கனவிலும்பொய்

சொல்லாமல் சொற்களைக்
கேளாமல்தோகையர் மாயையிலே

சொல்லாமல் செல்வந் தருவாய்
சிதம்பர தேசிகனே.

-பட்டினத்துச் சுவாமிகள்

ஆதலால், கடைத்தேறவேண்டும் என்ற கருத்துடையார் ஒவ்வொருவரும் புலால் உணவை ஒழித்துச் சுத்த சைவ உணவை உண்டு சாந்த சீலர்களாக ஒழுகுவார்களாக. தங்கள் குழந்தைகளுக்கு, அந்த உணவைக் கற்றுக்கொடாமல் பின் வருகின்ற சந்ததி சைவ நலம் உடையவர்களாகச் செய்க. முத்தி உலகிற்கு முதற்படி கொல்லாமையேயாகும். முத்தி வீட்டிற்குத் திறவுகோல் உயிர்க் கருணையேயாகும்.

நம்மினும் தாழ்ந்த உயிர்களிடம் நாம் கருணை காட்டினால், ஆண்டவன் நம்மிடம் கருணை காட்டுவான். கருணையைக் கருணையினாலேயே பெறவேண்டும்.

ஒரு தும்பியின் வாலைக் கிள்ளி முள்ளைச் சொருகிய பாவத்திற்காக மறு பிறப்பில் மாண்டவ்யர் கழுவில் கிடந்து துன்பமுற்றார்.

பன்னிரண்டு நாள் பசுங்கிளியின் சிறகையரிந்து கூட்டிலடைத்த பாவத்திற்காகக் கோபன்னா பன்னிரண்டு ஆண்டு சிறையில் கிடந்து கடுந்துன்பம் அநுபவித்தார்.

ஒரு புறாவுக்காக உடல் தசையை அறுத்துக் கொடுத்த பாரத நாட்டில் எல்லாரும் அகிம்சா தருமத்தை மேற்கொண்டு உயிர்களிடம் கருணை செய்து இம்மையில் புகழும் மறுமையில் புண்ணியமும் பெறுவாராகளாக.




22.4.2008 அன்று திருக்கோயில் திங்களிதழின் பொன் விழா ஆண்டு நிகழ்ச்சி, திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் மண்டல இணை ஆணையர் திரு.ந.தனபால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு.மிசா. சோம. திருநாவுக்கரசு அவர்கள், பேராசிரியர் டாக்டர் எஸ்.கணபதிராமன் அவர்கள், திரு மா.கந்தகுமார் அவர்கள், கவிஞர் அ, பொருநை பாலு அவர்கள், திருவள்ளுவர் கழக செயலாளர் திரு ஆ.சிவராமகிருஷ்னன் அவர்கள் மற்றும் சான்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# உலகம் உய்ய உதித்த உடையவர்

பெ.இராமநாதபிள்ளை, செயல் அலுவலர்,
திருமூர்த்திமலை, உடுமலை வட்டம்

ஸ்ரீ ராமானுஜர் திருக்கச்சி நம்பிகளைத் தமது அபிமான குருவாக ஏற்றுக்கொண்டு, தம் இல்லத்திற்கு அழைத்து, திரு அமுது படைத்து, அவர் உண்ட பின்பு மீதம் இருக்கிற உணவைப் புசிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவரைத் தம் இல்லத்தில் அமுது செய்ய அழைத்தார், ஸ்ரீராமானுஜரின் மனம் வருத்தம் அடையக் கூடாது என்ற எண்ணத்தில் திருக்கச்சி நம்பிகள் அதற்கு இசைந்தார். ஸ்ரீராமானுஜர் மனம் மிகவும் களிப்புற்று, தம் இல்லம் சேர்ந்தார். மனைவியிடம் விவரத்தைக் கூறி, திருக்கச்சி நம்பிகளுக்கு விருந்து அளிக்க ஏற்பாடு செய்யும்படிக் கூறினார். அதன்படியே விருந்துக்குண்டான எல்லாவற்றையும் ஸ்ரீராமானுஜரின் மனைவியான ரட்சகாம்பிகை அம்மையார் தயாரித்தார். ஸ்ரீராமானுஜர் திருக்கச்சி நம்பிகளின் வருகைக்காக காத்திருந்தார்.

திருக்கச்சி நம்பிகள் தனக்கு விருப்பமான ஆலவட்ட கைங்கர்ய (விசிறி வீசுதல்)-த்தைச் செய்த பின்னர், காஞ்சி வரதராஜ பெருமாளிடம்விடைபெற்றார். அப்பொழுது பெருமாள் திருக்கச்சி நம்பியை நோக்கி, ''நீர், ஒரு இல்லத்தில் விருந்துண்ண போகிறவன் போல இருக்கிறது உன் முகக்குறிப்பைத் தெளிவாகச் சொல்லுவாயாக, யாருடைய இல்லத்திற்கு செல்லவிருக்கிறாய்? என வினவினார் திருக்கச்சி நம்பிகள்,'' சுவாமி அன்பு மிக்க இளையாழ்வார் விருந்திற்கு அழைத்தார். அதற்குச் சம்மதித்து நான் செல்லவிருக்கிறேன்'' என மொழிந்தார் ஈரேழு பதினான்கு உலகங்களையும் உண்டு உமிழ்ந்த பெருமாள் திருக்கச்சி நம்பியிடம், ''நீரோ அவர் உண்ட மிச்சம் தமக்குக் கிடைக்கும் என நினைத்து விருந்துண்ணச் சம்மதித்தீர். ஆனால் ஸ்ரீராமானுஜரோ, நீர் உண்ட மிச்சம் அவர் உண்ண விரும்புகிறார்'' எனக் கூறி மீண்டும் சில உண்மைகளை உரைக்கலானார். ''திருக்கச்சி நம்பிகளே, இவ்ராமானுஜர் என்னைத் தாங்கி நிற்கின்ற ஆதிஷேசன் ஆவார். நான் முற்காலத்தில் அயோத்தி மாநகரில், தசரதச்சக்கரவர்த்திக்கு மகனாய் அவதரித்தபோது என் உடன்தோன்றிய தம்பிமார் மூவரில் ஒருவனாகிய இலக்குவன் தான் இப்போது இளையாழ்வாராய் (ஸ்ரீராமானுஜராய்) அவதரித்துள்ளார், அவர் உமது மிச்சலை உண்பது பழுது. ஆதலால் மேன்மை மிக்க ராமானுஜர் தன் திருவடிகள் வருந்த உம்மைத் தேடி வருவார், ஆதலால் மேன்மையான குணத்தினை உடைய திருக்கச்சி நம்பிகளே, நீர் அன்போடு வேறொருவழியாய், ஸ்ரீராமானுஜருடைய இல்லம் சென்று அங்கே திரும்பும்முன், நீர் உம்முடைய பசியை



போக்கிக் கொண்டு, சீக்கிரத்தில் வருவீராக'' என அருளிச் செய்தார், திருக்கச்சி நம்பிகளும், கண்ணில் ஆனந்தநீர் சொரிய, எம்பெருமானது இரண்டு திருவடிகளையும் வணங்கி, ஸ்ரீராமானுஜரின் இல்லம் நோக்கி நடந்தார்.

''மருவரும் குணத்தினானே மற்றவன் என்னைத்தாங்கும்

திரு அனந்தாழ்வான் ஆகும் தெசரதன் மகனாய் நான் முன்

பொருவரும் அயோத்தி தன்னில் போற்ற நாள் எம்பிமாராம்

இருவரோடு ஒருவரான லக்குவன் இளையாழ்வானாய்''

ஸ்ரீராமானுஜ வைபவம் (378)

ஸ்ரீராமானுஜரோ, திருக்கச்சி நம்பிகள் இன்னமும் வரவில்லையே'' என எண்ணி அவரைத் தேடி வேறொரு வழியாய் திருக்கோயிலை நோக்கி நடந்தார்.

திருக்கச்சி நம்பிகள் ஸ்ரீஇராமனுஜருடைய திருமாளிகை முன்பு வந்து, ஸ்ரீராமானுஜருடைய மனைவியை வணங்கி, ''பசியால் வாடி வந்திருக்கிறேன். தங்கள் கணவர் எங்கே இருக்கிறார் என வினவினார், அவ்வம்மையாரும் ''என் கணவர் தங்களைத் தேடி திருக்கோயிலுக்கு சென்றுள்ளார்'' என்றார். உடனே திருக்கச்சி நம்பிகள் அவ்வம்மையாரிடம் ''தாய் போன்றவரே அடியேன் பசியினாலே அருமையான உயிர் வாடினேன். பின்னர் தரலாம் என காலதாமதம் செய்யாமல் இப்பொழுதே இருக்கின்ற தளிகை போடும்'' எனச் சொல்ல, அம்மாதரசியும், திருக்கச்சி நம்பிகளுக்கு அன்புடன் உணவளித்தார். திருக்கச்சி நம்பிகள் மிகவும் அவசரத்தில் சீக்கிரமாக அமுது செய்து விட்டு உணவுண்ட இலையைத் தானே எடுத்து எறிந்து விட்டு, உணவுண்ட இடத்தினையும் தானே சுத்தி பண்ணிவிட்டு எம்பெருமாள் கோவிலுக்குச் சென்று விட்டார்.

பின்னர், திருக்கச்சி நம்பிகள் உண்ட இடத்தினை மீண்டும் சாணம் கலந்த நீரைத் தெளித்து சுத்தம் செய்தார் அம்மாதரசி. அவ்வாறு தெளித்து சுத்தம் செய்யும் பொழுது நீர் திவலைகள் தன்மேல் தெளித்ததினால், அவ்வம்மையார் அப்படியே சென்று குளத்தில் நீராடி விட்டு வீட்டிற்கு வந்தார்.

திருக்கோயிலில் திருக்கச்சி நம்பிகளை தேடிய ஸ்ரீராமானுஜர் அவரைக் காணாது, மிகவும் சோர்ந்தமுகத்துடன் வீட்டிற்கு வந்து, துணைவியாரிடம் ''இங்கே திருக்கச்சி நம்பி வந்தாரோ'' என வினவினார். அவருடைய துணைவியாரும் '' ஆமாம் திருக்கச்சி நம்பிகள் வந்தார்கள், மிகுந்த பசியினை உடையவராக இருக்கிறேன் உணவு இடுங்கள் எனக் கேட்டார், உணவு இட்டேன், அவசர அவசரமாய் சாப்பிட்டு விட்டு, எச்சில் இலையை ஒரு கையால் எடுத்து, மறுகையினால் சாப்பிட்ட இடத்தைச் சுத்தம் செய்து விட்டு உடனே புறப்பட்டு போனார்''- என சொல்லவும், அது கேட்டு மிகவும் வருந்தி தன் மனைவியை நோக்கி, ''கெடுத்துவிட்டாயே, அவர் உண்ட எச்சில் இலையை எங்கே சேர்த்தாரோ'' எனக் கேட்டு விட்டு அந்த எச்சில் தோட்டத்திலும் வீட்டின் உள்ளேயும், வெளியேயும் தேடியும் காணாதவராய், மிகுந்த வெறுப்புடன் மனைவியைப் பார்த்து, ''திருக்கச்சி நம்பியார் விருந்து உண்டு சென்ற பிறகு நீவிரைந்து குளத்திலே சென்று நீராடி விட்டு இங்கே வரக் காரணம் என்ன-'' என வினவவும், அவ்வம்மையார் ஸ்ரீராமானுஜரிடம், ''திருக்கச்சி நம்பியார் சாப்பிட்ட இடத்தைச் சுத்தம் செய்தேன், சாணநீர் திவலை என்மேல் தெளித்து விட்டது, எனவே குளத்தில் நீராடிவிட்டு வந்தேன்'' எனக் கூறினார்.

கொழுந்து விட்டு எரியக்கூடிய நெருப்பினை போன்று கோபங்கொண்ட ஸ்ரீராமானுஜர் தம்மனைவியை நோக்கி, ''நான் அவர் உண்ட எச்சிலை எதிர் நோக்கிக் காத்திருந்தேன். ஆனால் எனக்கு அந்த பாக்கியம் இல்லை, நீசெய்தது மன்னிக்க முடியாத குற்றம், மேலான குலத்திலே பிறந்து இருக்கிறோம் என்ற குலச்செருக்கினால் இறைவன் அருள் பெற்றவர் யாரேனும் உண்டோ, ஒரு வார்த்தை சொல்லுகிறேன். பழமையான வேதங்கள் நான்கிலும் சொல்லப்பட்ட கருத்தும் இதுதான். நாம் உயர்ந்த குலத்தவர் என கர்வத்தினை ஒருபோதும் யாரிடமும் காட்ட வேண்டாம் பாகவதர்களை நிந்தனை செய்யாதே'' என அறிவுரை கூறிவிட்டு சோர்ந்த முகமும், களைத்த உடம்புமான நிலையாய் திருக்கச்சி நம்பிகளைக் காண திருக்கோயிலுக்கு சென்றார். அங்கு திருக்கச்சி நம்பிகள் பெருமாளுக்கு ஆலவட்டம் கைங்கரியம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு, கை கூப்பி

வணங்கி, ''அடியேன் உம்மைச் சரணடைகிறேன், அடியேனை ரட்சிப்பீராக அடியேனை கைவிட்டு விடாதீர்கள் என பனித்த கண்களுடன் வேண்டினார்.

மேலும் திருக்கச்சி நம்பிகளை நோக்கி நான் சில எண்ணங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறேன். அதனை பேரருளாளனைக் கேட்டு என்னை தெளிவிக்க வேண்டும் எனக் கேட்கவும், அதற்கு திருக்கச்சி நம்பிகளும் சம்மதித்தார் அன்றிரவு திருக்கச்சி நம்பிகள் பேரருளாளனுக்கு ஆலவட்டம் கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும் பொழுது, ஸ்ரீராமானுஜரின் எண்ணங்களுக்கு விடையளிக்குமாறு பெருமாளைக் கேட்டார். மிகவும் உகப்படைந்த ஸ்ரீகாஞ்சி வரதராஜப் பெருமாள் ஸ்ரீஇராமானுஜரின் எண்ணங்களுக்கு திருக்கச்சி நம்பிகள் மூலம் ஆறு வார்த்தைகள் அருளினார்.

1. நானே சகலமும், உலகிற்கு காரணமான தத்துவங்களுக்கும் காரணமான பரத்துவமாவேன்.

2. ஜீவனுக்கும், இறைவனுக்கும் எல்லா நிலையிலும் வேற்றுமை தேறியே நிற்கிறது.

3. மோட்சத்தை விரும்புவோர்கள் சரணாகதியையே உபாயமாகப் பற்ற வேண்டும்

4. என்னைப் பற்றியவர்களுக்கு அந்திம ஸ்ம்ருதி தேவையில்லை.

5. என்னை பற்றியவர்களுக்கு இந்த ஜன்மத்திலே மரணமடைந்தால் நான் மோட்சம் தருவேன்

6. மகா பெரியவரான பெரிய நம்பிகளை ஸ்ரீராமானுஜர் ஆச்சாரியனாக ஏற்கட்டும் என்றருளினார்.

இதுவே ஸ்ரீராமானுஜர் மனதில் எண்ணிய கருத்துக்களாகும் என்றார் பேரருளாளர்.

''செப்புகின்ற பரதத்வம்யாமே
யென்னச் செப்புதிவே
உறாப்பிவாதாய் தரிசனமும்
பேதமென்றே யுரைத்திடுக
தப்பில்லாத உபாயமதும் ப்ரபத்தி
யென்றே சாந்திடுக
அப்புல்க விவையன்றி நினைவும்
வேண்டா அந்தி மந்தாய்''
இந்தச் சரீர வவதாளந் தன்னிலிசையும்
மேன்மையினும்
அந்தமில்லாக் குணத்தினனுக்
காசாரியனும் பெரியநம்பி
சிந்தையுள்ளே இவையல்லாற் தெளிந்து
நோக்கி இளையாழ்வார்
முந்த நினினைத்தாரி வையிவையே
மொழிந்து வருக போயென்றார்

இந்த பவித்ரமான ஆறு வார்த்தைகளைப் பேரருளாளரிடம் இருந்து, பெற்று திருக்கச்சி நம்பிகள், ஸ்ரீராமானுஜரிடம் அவற்றைத் தெரிவித்தார். மிகவும் மகிழ்ச்சி அடைந்த ஸ்ரீராமனுஜர், ஸ்ரீகாஞ்சி வரதராஜ பெருமாளிடமும் தான் ஆச்சாரியராக பாவித்த திருக்கச்சி நம்பிகளிடமும் விடைபெற்றுக் கொண்டு, தன் ஆச்சாரியனான பெரிய நம்பியைக் காண, ஸ்ரீகாஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு, அவர் இருக்கும் ஸ்ரீரங்கத்தை நோக்கித் தன் பயணத்தைத் தொடங்கினார்.

வளரும்

## தேவாரம்

தேவாரம் என்பது மூவர் முதலிகள் என்று போற்றப்படும் திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பட்ட பண்சுமந்த பதிகங்களின் தொகுப்புக்குப் பெயராகும். இச்சொல்லுக்குத் தெய்வத்தின் இருப்பிடம் என்பது பொருள். வாரம் என்றால் இடம், தாழ்வாரம் (தாழ்ந்துள்ள இடம்) மலையடி வாரம் (மலையின் கீழ் அமைந்த இடம்) என வரும் சொற்களைக் காண்க. தெய்வங்களுக்கு இருப்பிடமாக இருப்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் ஓணம்பாக்கம் என்னும் ஊரில் மலைமீது பாறையில் அழகிய பிரபையுடன் கூடிய தீர்த்தங்கரர் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. அதன் அருகில் வசுதேவ பட்டாரகர் செய்வித்தத தேவாரம் என்று பொறிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் தேவாரம் என்பது இறைவடிவத்தைக் குறிக்கின்றது.

கல்வெட்டுக்கள் நம் தேவாரத்துப் பதியம் பாடுவார்க்கு என்ற குறிப்பு உள்ளது இதன் மூலம் அரண்மனையில் இருந்த பூஜா மண்டபங்களும் தேவாரம் என்ற சொல்லால் அழைக்கப்பட்டதை அறிகிறோம்.

# "குருவே துணை"

தமிழாகரர் தெ.முருகசாமி
புதுச்சேரி - 9



தந்தைதாய் ஆவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பநமக் காவானும்- எந்தமுயிர்
தானாகு வானும் சரணாகு வானுமுயிர்க் கோனாகு வானும் குரு.

இஃதோர் குருவணக்கப் பழம்பாடல், இவ்வுலகில் ஆன்மா தூல உடம்பெடுத்துப் பிறத்தற்குத் தாயும் தந்தையுமே காரணமாவர். நிர்மலமற்றுப் பிறந்த உயிர் வளர்ந்து வாழ்க்கையில் வாழத் தலைப்படுகையில் பல்வேறு தொடர்புகளைப் பெறுகிறது. அத்தொடர்பு, உடல்தொடர்பு, மனத்தொடர்பு, உயிர்த் தொடர்பு என்று மூவகைப்படும்.

உடல் தொடர்பில் உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் இன்றியமையாதவை. ஆன்மா அல்லது உயிர் தாயின் கருவறையுள் தங்கி, தாய் உண்டதையே உண்டு அவள் விடும் மூச்சுக் காற்றையே மூச்சாய் உயிர்த்து வளர்ந்து உயிர் தொப்புள் கொடி அறுபட்டுப் பூமிக்கு வந்ததும் உணவு, உடை உறையுள்களைப் புறத்தே பெறத் துடிக்கிறது. ஈண்டுப் புறம் என்றது உயிரைத் தாங்கும் உடலைக் குறிப்பது.

உடல் வளர உணவு தேவை, மானமுள்ள பிறவி மானுடப் பிறவி என்பதால் உடலுக்கு மானமுள்ள உடை தேவைப்படுகிறது. பறந்து திரியும் பறவை அலைந்த அலுப்பை நீக்கிக் கொள்ள வந்தடையும் கூட்டைப் போல உலகியலில் உடல்பட்ட பாட்டின் அலுப்பைப் போக்கிக் கொள்ளும் உறைவிடமாகத் தேவைப்பட்டது வீடு.

இப்புறச்சூழல் தொடர்புகளுடன் ஆன்மா வளரும்போதே பலபடிப்பினைகளைக் கற்றுக் கொண்டே வளர்கிறது. அக்கற்றல்தான் ஆன்மாவுக்குள்ள மனம் பக்குவப்படுதல் என்பது. கல்வி, கேள்விகளால் மனம் பக்குவப்பட உலக வாழ்வைப் புரிந்து கொள்ளும் நிலை உருவாகும். இதைக் குடும்பத் தொடர்பின் விரிவாக்கம் எனலாம்.

இப்படியாக உணவால் உடையால் உறைவிடத்தால் உடல் பெற்ற தொடர்புக்கு மேம்பட்டதாகக் கல்வி கேள்விகளால் ஏற்பட்ட மனத்தொடர்பு உள்ளது அது இவ்வுலகில் உடலோடு ஆன்மா இருக்கின்றது வரை இருந்து பின்னர் நீங்கி விடுவனவாகும். ஆனாலும் இவ்விரு தொடர்புகளும் உயிர்க்குப் புறத்துணைகளாகும். இப்புறத் துணைகளின் பற்றுக் கோட்டுடன் உயிர்பெறும் அனுபவமே சிறந்தது. அதுவே உயிர் உய்தி பெறுதற்கான அடிப்படை.

உயிரின் அனுபவம் முன்னோக்கியதாக இருந்தால் உய்திபெறுதற்குரிய நிலை ஏற்படும். பின்னோக்கியதாக இருந்தால் மீண்டும் பிறந்திறக்கும் சூழலில் காலந் தாழ்த்தி உய்திபெறும். இதைத்தான் நம்மாழ்வாரின் வரலாறு சுருக்கமாக உணர்த்துகிறது.

சடகோபராகப் பெயர் பெற்ற குழந்தை பிறந்தது முதலில் பேசாமல் கிடந்தது. பேச வைக்கும் முயற்சியில் அதனிடம் செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும் எனக்கேட்கப்பட்டபோது அதை கேட்ட குழந்தைக்கு ஞானம் பிறக்க, உடனே, அத்தைத் தின்று அங்கே கிடக்கும் என்றுபதில் கூறியது.

செத்ததன் வயிறு என்பது செத்துச் செத்துப் பிறக்கும் உடலைக் குறிப்பது, சிறியது என்பது உடலின் உள்ளே உறையும் உயிரைக் குறிப்பது, செத்துச் செத்துப் பிறக்கும் உயிரின் வாதனைக்கு என்ன காரணம் எனில் உலகப்பற்றைவிடாமல் தின்னுவதுதான் என்பதை ஏனைய தொடர்கள் விளக்குகின்றன. ஆசைதான் பிறவிக்கு வித்து என்பது கௌதம புத்தரின் கண்டு பிடிப்பு எனவே பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் என்றபடி நல்லது நோக்கிய ஆன்மாவின் அசைவுதான், உடலை, உடல் சார்ந்த தொடர்புகளைப் புறந்தள்ளியதாகக் காட்டிக் கொண்ட அடையாளம் எனலாம்.



பக்குவப்பட்டதாகக் காட்டிக் கொள்ளும் இவ்வடையாளம் ஒன்றால் மட்டுமே உயிர் தானாகத் தனித்து உய்திபெற முடியாது. இவ்வுயிரை வழிநடத்தும் உற்ற துணை ஒன்று வேண்டும். அது தான் மானுடச்சட்டை தாங்கிய குருவடிவான ஆண்டவன் ஆவார்.

ஒவ்வொருவர்க்கும் அறிவு உண்டெனினும் அதை விளக்கப்படுத்த உலகியலில் ஆசிரியர் தேவைப்படுதல் போல ஆன்ம உலகில் ஆசிரியனாக உயிர்க்கு அமைபவன் குருவாவார். குருபார்வை கோடி புண்ணியம். இந்த வகையில் உடல் தொடர்பு, மனத்தொடர்பு. உயிர்த் தொடர்பான மூன்றும் ஒவ்வொருவர்க்கும் உண்டெனினும் அவைகள் அருளாளர்களின் வாழ்வின் வழிக் காண்கையில் பரிணமிக்கும் என்பதால் அந்த பரிணமிப்பில் உயர்ந்தவர் மணிவாசகர் என்பதை அவரது திருநட்சத்திரம் அமைந்த ஆனி மாதத்தில் சிந்திப்பது பெருஞ்சிறப்பு எனலாம்.

மணிவாசகர் சராசரி மனிதராகவே வாதவூரில் அமாத்திய குலத்தில் பிறக்கிறார். கல்விகேள்விகளால் உயர்கிறார். இதனால் பாண்டியனிடம் அமைச்சராகிக் குதிரை வாங்கத் திருப்பெருந் துறைப் பக்கம் செல்லுங்கால் குருவால் ஆட்கொள்ளப்படுகிறார். குதிரை வாங்கச் சென்றது வரை சராசரி மனிதராக இருந்தவர் இரசவாதத்தால் இரும்பு பொன்னாவது போல மாறி விடுகிறார். இம்மாற்றத்திற்கு, ஏதோ ஒன்றைத் தேடி அலைந்த அவரின் ஆன்மாவின் அசைவுதான் காரணமாகும். அதாவது வாதவூரரின் மனம் உலகவாதனையைக் கடந்த ஏதோ ஒன்றில்



எப்போதும் இலயித்த வண்ணம் இருந்துள்ளது எனத் தெரிகிறது. இந்த இலயிப்பை மணிவாசகர் கூறும் போது,

செந்தமிழ் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெரும் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்தாண்டாய்

எனப் பள்ளியெழுச்சிப்பாடலில் பதிவு செய்கிறார். இந்த வகையில் உடல் தொடர்பும் மனத்தொடர்பும் கழலக் கழல உலக வாசனை நீங்கிய உயிரில் இறைவன் தொடர்பு கொள்ளத் தொடங்கியதை உணர்ந்ததால், இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தான் வாழ்க என்றார் மணிவாசகர்.

இவ்வாசகத்தை ஆன்மாவில் ஆண்டவன் கலந்துவிட்ட ஐக்கிய வாசகமாகக் கருதலாம். அதற்கும் மேலாக ஆண்டவனை ஆன்மா அனுபவிக்கும் அனுபவ வாசகமாகவும் உணரலாம். ஈண்டு உரைப்படும் ஐக்கியமோ அனுபவமோ இவ்விரண்டிற்கும் நடுவே ஒளிரும் ஒன்றுதான் குருவுக்குக் கிடைத்த சீடன் (சூன்மா) சீடனுக்குக் கிடைத்த குரு என்ற வனப்பாகும். இவ்வனப்பைத் திருவாசகம் முழுவதிலும் காணலாம். எனவே மேற்குறித்த தந்தைதாய் ஆவானும் சார்கதியிங் காவானும் என்ற பாடல் உடல் மனம் உயிர் தொடர்புகளை விளக்குவதோர் அரிய பாடல் எனலாம்.

உலகியலில் அறியாமையைப் போக்கும் ஆசிரியரைப்போல ஆன்மிக உலகில் உயிரின் அறியாமையாகிய அழுக்கைப் போக்கவல்லவர் குரு ஆவார், பலவார்த்தைகள் அடங்கிய பாடங்களால் ஆசிரியர் மாணாக்கர் அன்பை பக்குவப்படுத்துவார். குருவோ ஒருவார்த்தையால் பக்குவப்படுத்துவார். இதைத்தான் மணிவாசகர் ஓர் வார்த்தையுள் படுத்து என்றார், எனவே அழுக்கேறிய ஆன்மாவை வெளுக்கச் செய்யும் குருவே துணை என்பது ஆன்மாவை ஈடேற்றவல்ல ஆன்மிகப் பிரகடன வாசகம் எனலாம் என்க.

# அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில்

## பட்டீஸ்வரம், கும்பகோணம் வட்டம்



திருக்கோயில் வரலாறு:

கோயில் நகரமான கும்பகோணத்திற்கு தென்மேற்கே எட்டு கிலோ மீட்டர் தொலைவில் பட்டீஸ்வரம் அமைந்துள்ளது. தேவாரப் பாடல் பெற்ற சிவத்தல வரிசையில் காவிரியின் தென்கரையில் அமைந்த 23வது திருத்தலமாகும். திருக்கோயில் கிழக்கு நோக்கியவாறு ஐந்து கோபுரங்களுடன் காட்சியளிக்கிறது. இத்திருக்கோயிலில் பல்லவர், சோழர், நாயக்கர், மராட்டியர் காலக் கலையின் சிறப்புக்களைக் காணலாம்.

அன்னை பராசக்தியானவள் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்த பழம்பதி: காமதேனு விரும்பி வாழ்ந்த தலம்; தேவலோகப் பசுவான காமதேனுவின் பெண் மக்கள் நால்வருள் பட்டியால் பூஜிக்கப்பட்ட தலம்: இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட சாயாஹத்தி மற்றும் பிரம்மஹத்தி என்னும் கொலைப்பாவம் நீங்க ஸ்ரீ இராமபிரான் சிவலிங்க பிரதிஷ்டை செய்து சிவபூஜை செய்த சிறந்த தலம். இராமேஸ்வரத்துக்கு இணையானதலம். விசுவாமித்திரருக்குக் காயத்திரி எனும் மகாமந்திரம் சித்திக்கப்பெற்று பிரம்மரிஷி பட்டம் கிடைக்கப் பெற்ற தலம். மேதாவி முனிவரால் தர்மசர்மாவிற்கு ஏற்பட்ட நாய் வடிவம் நீங்கப் பெற்ற தலம். முதுவேனிற் காலத்தில், நண்பகற் பொழுதில் வழிபட வந்த திருஞான சம்பந்தருக்குக் கோடையின் வெம்மையைப் போக்கச் சிவபெருமான் முத்துப்பந்தல் அளித்து அதன்கீழ் அந்த ஞானக்குழந்தை நடந்து வரும் அழகைக் காண நந்தியை விலகக் கட்டளையிட்டதலம். திருஞானசம்பந்தருக்காக நந்தி விலகியிருக்கும் தலம்.

தலப்பெருமை:

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூவகையாலும் சிறப்பு மிக்கது. இத்திருக்கோயிலில் அமைந்துள்ள ஸ்ரீமதவாரண விநாயகர், ஸ்ரீ சண்முகர், ஸ்ரீ துர்க்காம்பிகை, ஸ்ரீ பைரவர் ஆகிய நான்கு தெய்வத் திருமேனிகளும் சோழ மாமன்னர்களால் வழிபட்டனவாக சொல்லப்படுகிறது. இத்திருக்கோயிலின் வடக்கு வாயிலில் வடக்கு நோக்கி இருந்து அருளாட்சி செய்யும் ஸ்ரீ துர்க்காம்பிகை பிரதான பிரார்த்தனைத் தெய்வமாவாள். இவள் விஷ்ணு துர்க்கை என்றும் துர்க்கா லெட்சுமி என்றும் அழைக்கப்படுகின்றாள். நவசக்தி நாயகி, நவரத்ன நாயகி, நவயோக நாயகி, நவக்கிரஹ நாயகி, நவராத்திரி நாயகி, நவசக்தி நாயகி, நவகோடி நாயகி எனப் போற்றப்படுகின்றாள். இவ்வன்னை கலியுகத்தின் கற்பக விருட்சம், சோழ மாமன்னர்களின் வெற்றித் திருமகுடம்.

மகிடன் தலைமேல் சிம்ம வாகினியாய், திரிபங்க ரூபமாய் எட்டுத் திருக்கரங்களில் சங்கு, சக்கரம், வில், அம்பு, கத்தி, கேடயம்,



ஊருஹஸ்தத்தில் கிளியைத் தாங்கி அபயக்கரத்தோடு காட்சியளிக்கின்றாள். எழில் கொஞ்சும் அழகு, புன்னகை சிந்தும் மலர் முகம். சபலத்தால் சங்கடம் உற்று மனச்சஞ்சலத்துடன் அம்மா! ஸ்ரீ துர்க்காம்பிகே! எனக்கு வாழ வழியில்லை, நோயின் இம்சை தாங்க முடியவில்லை. வேறு கதியில்லை என்று இவ்வன்னையைச் சரணடைந்தால், இதோ ஓடி வருகின்றேன். இனி உனக்குக் கவலையில்லை என்பதை உணர்த்த ஓடிவர எத்தனிக்கும் இவ்வன்னையின் பொற்பாதத்தைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும். ஒரு புறம் இருந்து நோக்க என்ன வேண்டும் என்று கேட்கும் தாயின் பரிவும் மறுபுறம் இருந்து நோக்க கொஞ்சம் பொறு தருகின்றேன் என்னும் தாயன்பிற்கும் ஈடுஇணையில்லை.

**பட்டீஸ்வரம் அருள்மிகு துர்க்காம்பிகையை வழிபடுவதால் பெறும் பயன்கள்:**

விக்னம் நீங்க விக்னேஸ்வர பூஜை எவ்வளவு அவசியமோ அதே போல் துக்கம்போக்க துர்க்கா தேவியை வழிபடுவது நல்லது. எல்லாத் தீமைகளையும் அழித்து, எல்லாத் தடைகளையும் போக்கி நல்வாழ்க்வைத் தருபவள் ஸ்ரீ துர்க்காம்பிகையே ஆவாள். வெற்றியை விரும்புவோர் பட்டீஸ்வரம் ஸ்ரீதுர்க்காம்பிகையை விரும்பி வழிபடுவர்.

சிவன், விஷ்ணு, பிரமன், யமன், இந்திரன் முதலான தேவர்களின் மகா சக்திகளின் ஒட்டுமொத்த வடிவாக ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரி விளங்குவதால் அவள் பல ரூபங்களைக் கொண்டவள், அவளை நினைத்தாலும் அவளுடைய மகா மந்திரங்களை ஜபித்தாலும் நமக்கு ஏற்படக்கூடிய மரணபயம், இஹலோக பயம், பரலோக பயம், அரசூக பயம், அருதி பயம், வேதனா பயங்கள் ஓடி ஒளிகின்றன. அனைத்து தேவர்களையும் வணங்கிய பயன் கிட்டும்.

ஒவ்வொரு நாளும் இராகு கால நேரங்களில் ஸ்ரீதுர்க்காம்பிகையை இராகு பகவான் வழிபட வருவதாக ஐதீகம். ஆக, இராகுவை வணங்குவதைவிட இராகுக்கு அதிதேவதையான ஸ்ரீ துர்க்காம்பிகையை வழிபடுவது மிகவும் பயனளிக்க வல்லது. செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் அஷ்டமி, நவமி திதிகளிலும் அமாவாசை, பௌர்ணமி நாட்களிலும் துர்க்கையை வழிபடுவது சாலச்சிறந்தது.

ஒருவருடைய ஜாதகத்தில் இராகு மற்றும் செவ்வாய் கிரகதோஷத்தால் திருமணத் தடைகள் ஏற்படும். இதிலிருந்து நிவர்த்தி பெற ஸ்ரீ துர்க்காம்பிகைக்குப் புடவை சார்த்தி எலுமிச்சம்பழ மாலை, செவ்வரளி மாலை அணிவித்து, பசுநெய் அல்லது நல்லெண்ணெயால் தன் வயது எண்ணிக்கையுள்ள தீபம் ஏற்றி, குங்குமத்தால் அர்ச்சனை செய்ய திருமணத் தடைகள் நீங்கும். மகப்பேறு கிட்டும். தொழில் அபிவிருத்தியாகும். கல்வியில் தேர்ச்சி பெறுவர். சகல செல்வங்களும் பெருகும்.

27, 54, 108, 1008 எண்ணிக்கை உள்ள எலுமிச்சம்பழ மாலையைச் சாற்றுவதால் நமக்கு உண்டாகும் உக்ரமான நோய்கள் தணிகின்றன. தீராத கஷ்டங்கள் நீங்குகின்றன.

வில்வம், அரளி இவற்றில் சிவன் உறைகிறான். இம்மலரை கரம்வீரம் என்பர். பொதுவாக சிவப்பு மலர்களால்ஆன மாலையை அம்பாளுக்கு அணிவித்தாலோ அல்லது அம்மலர்களால் அர்ச்சனை செய்தாலோ அங்கார (செவ்வாய் கிரக)

தோஷ நிவர்த்தி ஏற்படும். ஆயுள் நீடிக்கும். அம்பாளின் பரம கருணை கிட்டும்.

குங்குமம் வீரத்தை வழங்குகின்றது. தியான சிந்தனை, எண்ணிய செயலை முடிக்கும் சக்தியும் ஆற்றலும் கிட்டுகின்றது.


விஷ்ணுக் கிரந்தி மூலிகைச் செடியால் சகஸ்ர நாம அர்ச்சனை செய்ய எதிரிகள் குறைவர், எதிர்ப்புகள் அகலும்.

இத்திருக்கோயிலில் அமைந்துள்ள அருள்மிகு கால பைரவர் சோழ மாமன்னர்களால் போற்றி வழிபடப்பட்டவர். இவருக்கு தேய்பிறை அஷ்டமி தோறும் (பைரவாஷ்டமி) சிறப்பு அபிஷேக ஆராதனைகளும் வடை மாலை சாற்றி, தயிர் பள்ளயமிட்டு சிறப்பு பூஜைகளும் நடைபெற்று வருகின்றன. நோயுற்றோர், கடன் சுமையில் அழுந்துவோர், துஷ்டகிரகப்பிடியில் அகப்பட்டோர், குற்றம் சுமத்தப் பெற்றோர் பைரவரை பூஜித்தால் நலம் பயக்கும். ஸ்ரீ பைரவர் அபிஷேக நேரம்: காலை 9.00 மணி, பகல் 12,00 மணி, இரவு 8.00 மணி ஆகும்.

இத்திருக்கோயிலில் வைகாசி விசாகம், ஆடிவெள்ளி, மார்கழி மாத விழா மிக சிறப்பாக கொண்டாடப்படும் விழாக்களாகும். முத்துப்பந்தல் விழா மூன்று நாட்கள் நடைபெறும். இவ்விழா திருக்கோயிலுக்கே உரிய விழா. ஆனி முதல் தேதி முத்துப்பந்தல் வழங்கும் விழா நடைபெறும். முதல் இரு நாட்களில் திருஞானசம்பந்தருக்கு பல்வேறு தலங்களில் சிவபெருமான் அருளால் கிடைக்கப் பெற்ற அற்புதங்கள் விழாவாக நடைபெறும். இவ்விழா நாயகர் ஞானசம்பந்தரே. 45 அடிநீளம் 35 அடி உயரம் உள்ள முத்துப்பல்லக்கினை 4கி.மீ. தூரம் 100 நபர்களுக்கு குறையாது தோளில் சுமந்து செல்வர். பகல் 12.00 மணிக்கு திருசக்திமுற்றம் கோயிலிலிருந்து ஞானசம்பந்தர் முத்துப்பந்தலில் பட்டீச்சரம் திருக்கோயிலுக்கு அடியார்புடைசூழ எழுந்தருளுவார்.

மார்கழி விழா: மார்கழி அமாவாசையன்று பஞ்சமூர்த்தி புறப்பாடு உண்டு. கோடி தீர்த்தவாரி உற்சவம் இராமருக்கு ஏற்பட்ட சாயாஹத்தி தோஷ நிவர்த்தி நிகழ்வை நினைவூட்டும் வகையில் இவ்விழா நடைபெறுகின்றது. தீர்த்தம் கொடுக்கும் பொழுது இரண்டு கருடன்கள் இன்றும் வானில் வட்டமிடுகின்றன.





**பூஜைகள்:**

இத்திருக்கோயிலில் ஆறுகால பூஜைகள் காரண ஆகம முறைப்படி நடைபெறுகின்றன. உஷக்காலம்(காலை 6.00 மணி முதல் 6.30 மணிக்குள்), காலசந்தி (காலை 9.00 மணி முதல் 9.30 மணிக்குள்) உச்சிக்காலம் (பகல் 12.30 மணி முதல் 1.00 மணி பகல்1.00 மணிமுதல் 4.00 மணிவரை நடை அடைப்பு. சரியாக 4.00 மணிக்கு நடைதிறக்கும்), சாயரட்சை (மாலை 5.00 மணி முதல் 6.00 மணிவரை), இரண்டாம் காலம்(இரவு 8.00 மணி முதல் 8.30 மணி வரை), அர்த்த சாமம் (இரவு 9.00 மணி)

வெள்ளிக்கிழமைகளில் இரவு 10.00 மணிவரை நடை திறந்திருக்கும். ஆடிமாத வெள்ளிக்கிழமைகளில் அதிகாலை 4.00 மணிமுதல் இரவு 12.00 மணி வரை நடை திறந்திருக்கும்.

**திருக்கோயிலுக்கு வரும் வழித்தடம்:**

குடந்தையிலிருந்து தென்மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து 8,11,25,35,52,61,67 முதலான வழித்தடம் எண்ணுள்ள நகரப் பேருந்துகள் பட்டீஸ்வரம் செல்கின்றன. கும்பகோணம் குடந்தை கோட்ட பேருந்து 454. தனியார் பேருந்துகளான நாகூர் ஆண்டவர் பட்டீஸ்வரம் வழியாக தஞ்சாவூருக்கு செல்கின்றன. மினி பஸ் வசதி உண்டு. சேவார்த்திகள் கும்பகோணம் நகரில் தங்கும் வசதி உள்ளது.

சேவார்த்திகள் பிரார்த்தனைக் கட்டணங்களை பணவிடைகள் மற்றும் வங்கிக் கேட்பு வரைவோலை மூலம் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம். வரைவோலைகள் கும்பகோணம் கிளை உள்ள எந்த வங்கியிலும் மாற்றத்தக்க அளவில்

செயல் அலுவலர், அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில், பட்டீஸ்வரம் - 612703, கும்பகோணம் வட்டம். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு **த. பிச்சாண்டி**, இ.ஆ.ப., சிறப்பு ஆணையாளர்
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் (பொ.) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர்: குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



29.6.2008 அன்று மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு கே ஆர். பெரியகருப்பன் அவர்கள், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் நலன் கருதி அமைக்கப்படும் நுழைவுக் கட்டணச் சீட்டு வழங்கும் இடத்திற்கான கூடாரம் அமைத்தல், மற்றும் தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைய உள்ள இடங்களைப் பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார்.





கோவை மாவட்டம் - திருமூர்த்திமலை அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் 9.6.2008 அன்று நடைபெற்ற, பக்தர்கள் வசதிகள் மேம்பாடு குறித்த கலந்தாய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு ஊரக தொழில் வளர்ச்சி மற்றும் கால்நடை துறை அமைச்சர் திரு பொங்கலூர் என்.பழனிச்சாமி அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு கே ஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ் அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் திரு. த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்பித்தனர்.





பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08



# அருள்மிகு முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயில்

## மயிலாப்பூர், சென்னை - 600004.

## ஆடித் திருவிழா

அம்பிகை அருள்பாலித்துக் கொண்டிருக்கும் தலம் திருமயிலை முண்டகக் கண்ணியம்மன் திருத்தலம். மிகப் பழமை வாய்ந்த பிரார்த்தனை தலம். 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டதும் சுயம்புவாக தோன்றி சுயம்பு வடிவில் அருவுருவத் தோற்றத்தில் முகப்பில் திரிசூலம் பதித்ததும் மேல் பகுதி தாமரை மொட்டை போன்ற வடிவில் உள்ளதால் (தாமரையின் மறுபெயர் முண்டகம்) அம்பாள் ''முண்டகக் கண்ணியம்மன்'' என அழைக்கப்படுகிறாள், தினமும் இரவில் நாகம் வழிபடுவதால் ஓலைக் கூரையில் அம்பாள் அமர்ந்துள்ளாள். வெப்ப நோய்களை நீக்கி பக்தர்களுக்கு குளிர்ச்சியை தருவதற்காக ஓலைகூரையில் அம்பாள் அமர்ந்துள்ளாள் என்கின்றனர்.

பக்தர்கள் காணிக்கை / நன்கொடையைக் கொண்டு ஒரு கோடி மதிப்பில் தங்கரதம் செய்யப்பட்டு 3.6.2007 முதல் உலா வந்து கொண்டிருக்கின்றது, ரூ.1000/- கட்டணம் செலுத்தி பிறந்தநாள், திருமணநாள் ஆகியவற்றில் பக்தர்கள் தங்கரதம் இழுக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

தினசரி அன்னதானம் இக்கோயிலில் நடை பெறுகிறது, இதற்கு ரூ, 1500/- தொகை செலுத்தி விரும்பிய நாளில் அன்னதானம் வழங்கலாம், அன்னதானத்திற்கு அளிக்கப்படும் நன்கொடைக்கு வருமான வரி 80(G),ன் படி வரி விலக்கு உண்டு,

கோடி தீபம் ஏற்றும் நிகழ்ச்சி இக்கோயிலில் நடைபெறுகிறது, நட்சத்திர அடிப்படையிலும், பிறந்த வயது அடிப்படையிலும், நினைத்த காரியம் நிறைவேற வேண்டும் என்ற அடிப்படையிலும் தீபங்கள் ஏற்ற வ சதி செய்யப்பட்டுள்ளது.

ஆடி திருவிழா முக்கிய திருவிழாவாகும் வெள்ளி, செவ்வாய், ஞாயிறு தினங்கள் அம்பாளுக்கு மிக உகந்த நாளாகும். பக்தர்களுக்கு கூழ்வார்த்து ஊற்றும் நிகழ்ச்சி தினசரி நடைபெறுகிறது, ஆடிப்பூரத்தில் 1008 கூடை பூக்கள் 1008 மகளிர் சுமந்து திருவீதி வலம் வந்து மூலவர் அம்பாளுக்கு பூச்சொரிதல் விழா நடைபெறுகிறது.

சிறப்புமிக்க பிரார்த்தனை தலமான இக்கோயிலின் அம்பாளை வழிபட்டு சகல நலனும் வளமும் பெற்று வாழ பிரார்த்திக்கின்றோம்,

இங்ஙனம்

த. மோகன சுந்தரம்
செயல் அலுவலர்

லோ. உதயகுமார்,
அறங்காவலர் குழுத்தலைவர்

ஆர்.எல். வாசுதேவன், எம். டில்லி, எம்.கிருஷ்ணவேணி, சி. ராமநாதன்,
அறங்காவலர்கள்